இளைஞர் தமிழ்ச் சங்கம்,
பாகனேரி.



# பெண்களுக்குச் சம உரிமை

"FAIR DEALING" IS OUR MOTTO

# C. A. RATHINA MUDALIYAR,

SILK & CLOTH MERCHANT of

LONG STANDING REPUTE FOR RELIABILITY & DURABILITY

The favourite haunt of FASHIONABLE COLLEGE BELLS

for Clothes of all Sorts!

***FAMOUS DEALERS IN ALL SUPERIOR SAREES, JACKETS, HAND-MADE CLOTHES, DHOTIES, Etc.***

*Address*:-

80. TIRUPALLI STREET, G. T. MADRAS.

Near Tondaimandalam High School.

***N. B:-*** Conveniently accessible from the Tirupalli St., Bus Stop on the Mint to Triplicane and Kelly's Bus Routes on the Wall Tax Road (Namely Nos. 2 & 14)

# பெண்களுக்குச் சம உரிமை

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
★ CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

1587 / 3647

முகவுரை:

யோகி. சுத்தானந்த பாரதியார்

★

கல்லூரி மாணவிகள் பலர் வரைந்தது

திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம் பாகனேரி

★

நியூ இந்தியா புக் ஹவுஸ்,
இராமச்சந்திரபுரம் P. O.
திருச்சி ஜில்லா

பதிப்புரிமை] 1947 [விலை 0-12-0

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

3648

# முன்னுரை.

சுமார் இருபதாண்டுகளுக்கு முன் சென்னையில் பெண்ணுரிமைக்காகப் போர் நடத்தினேன். மாதர் மறுமணங்களை ஊக்கினேன்; பெண்கள் நன்ருகக் கல்வி கற்றுப் பதினெட்டு வயதிற்கு மேலேதான் மனங்கொண்ட காதலனுடன் இல்லறம் புகவேண்டும் என்று வற்புறுத்தினேன்; எனக்கு வந்த போற்றலும் தூற்றலும் பல-எனினும் என் எண்ணம் இன்று நிறைவேறிவிட்டதுபற்றி மகிழ்ச்சியடைகிறேன். அந்தக்காலம் பாடிய **பெண்சக்திக் கும்மியை** இன்று பல பெண்கள் உரிமையுடன் பாடியாடுவதைக்கண்டு பூரிக்கிறேன்.

ஒரு நாள் கோகலே ஹாலில் பெண்ணுரிமைக் கூட்டம் நடந்தது; அதற்கு நான் தலைமை தாங்கினேன். தலைமையுரையில் "இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க ஒரு பெண்மணியே தக்கவள்; எனினும் இந்த ஆண்மணியும் ஒரு பெண்மணியாக நினைத்துக்கொண்டே இங்கே பேசுகிருன்; மீசை தாடியை மறந்து விடுங்கள் அவன் உள்ளம் இப்போது பெண்ணுள்ளம். அதில் பெண்ணுரிமை துடிக்கிறது; என்று பேசியதும் கை தட்டல் ஒரு நிமிஷம் சடசடத்தது. கூட்டமுடிவில் ஒரு நண்பர் ஸ்ரீமதி சுத்தானந்தம் வாழ்க" என்று என்

காதில் ஓதினர். நான் பெண்ணுரிமைக்காகப் பேசும்போதெல்லாம் ஸ்ரீமதியாவதே வழக்கம்.

பெண்ணுரிமையைப் பெண்ணுள்ளமே உரிமையுடன் அறிந்து பேசமுடியும். அப்படி அறிந்த பெண்மணிகளே இந்த நூலில் பேசுகிருர்கள். இந்த நூலுக்கு முன்னுரை எழுதும்போது நான் ஸ்ரீமதியாகவே உணர்ந்து எழுதுகிறேன்.

நான் பெண்ணுனல் இருபது வயதுவரையில் அறிவை வளர்ப்பேன்; உடலை உறுதி செய்வேன்; கலை வளர்ப்பேன்; மானமாகப் பிழைக்கத்தொழில் கற்பேன்; குமரனே என் கணவனுக வந்தாலும் வள்ளி மாதிரி மயங்கமாட்டேன். யாராவது என்னைக் கற்பழிக்கச் சேட்டை காட்டினல் சாட்டையால் வெளுத்து இனி அவன் எந்தப் பெண்ணையும் எளிதாக நினைக்காது செய்வேன்.

கலியாணப் பேச்சைக் காதிலே போட்டுக் கொள்ளவே மாட்டேன். சோதிடர் புரோகிதர் யாரையும் என் கிட்டவர விடமாட்டேன். பஞ்சாங்க மனப்பான்மையும், பழம் பசலிச்சடங்குகளும் என்னை அஞ்சி முதுகுகாட்டி ஓடச்செய்வேன். இருபதாண்டு மட்டும் பிரமசரியக் கல்விகற்று முடிந்தபிறகுதான் இல்லறத்தை நாடுவேன். நல்ல பலவானுகவும், அறிவாளியாகவும், உலகம் தெரிந்து நடக்கும் தீரனுகவும், பிழைக்க ஒரு நல்லதொழிலில்

திறமை பெற்றவனுகவும், கலைச்சுவை யுள்ளவனுக வும், முகமலர்ந்து புன்னகைததும்பப் பேசுகிறவ னுகவும் பார்த்து ஓர் இளங்காளையை மணம்புரி வேன். மனம் புரிதலே மணம் புரிதலாம். இல்லறத்தில் என் கணவனை உயிர்போல் மதித்து அன்பும் கற்பும் காத்துத்தொண்டு செய்வேன். நான் வீட்டரசி; சரியான அரசியாயிருப்பேன்.

திருக்குறள் யோகசித்தி இரண்டையும் வாழ்ந்து காட்டுவேன். எனக்கு நான் குழந்தைகள் போதும்; பிறகு சிற்றின்ப வாடையே கூடாது; என் கணவனுடன் யோகம் புரிவேன். குழந்தை களை நல்ல புலவராக்கி, தீரவீர சூரராக்கி, அவர்கள் கையில் குடும்பப் பொறுப்பை விட்டு, நான் பெண் ணினத்திற்குக் கல்வித் தொண்டும், சீர்திருத்தத் தொண்டும் புரிவேன். அல்லது ஒரு சன்மார்க்க நிலையம் நாட்டி என்னைப் போன்ற முதிய பெண் களை சன்மார்க்கத் தொண்டிற்கும், ஆசிரியர், மருத்துவர், கலைவாணர் முதலிய வேலைகளுக்கும் பழக்குவேன் அல்லது கன்னியர் குருகுலம் நடத் துவேன். பெண்ணுலகிற்கு என் வாழ்வையே பலிதானமாக்குவேன். அப்படியே என் கணவ னும் ஆணுலகிற்குத் தொண்டுசெய்ய ஊக்குவேன். ஒருவேளை என் கணவன் இறந்துபோனல்? என்னை யாராவது விதவை என்ருல் சீறுவேன். விதவை என்பதே அகராதியில் இருக்கக் கூடாது என்பது என் கருத்து. இளம் பெண்கள் மறுமணம் புரிய வேண்டும். ஆனல் நான் கணவனை இழந்தால் கடவுளையே கணவனுகக் கருதி, யோகமும், பொது நலத் தொண்டுமாகவே வாழ்வேன். அதே நிலை யில் என் மகள் மறுமணம் புரிய விரும்பினல், உடனே அவள் எண்ணத்தை நிறைவேற்றுவேன்.

நான் தலை நிமிர்ந்தே நடப்பேன். என்னைத் தேடிவரும் நண்பருடன் முகமலர்ந்து பழகுவேன்— அதனால் என் கற்பிற்குப் பழுது வராது. இந்தக் கால மனிதர் பெண்ணுரிமையைப்பற்றி நீளப் பேசுகிறார்கள், பாடுகிறார்கள், கூட்டம் போடுகிறார்கள்-ஆணும் பெண்ணும் சரிநிகர் என்கிறார்கள்- தெருவில் ஒரு பெண் ஓர் ஆணுடன் சரி சமனாக நடந்தால், கைகுலுக்கினால், தாராளமாகப் பேசினால், ஆபாசமான கதை கட்டி கேலி செய்கிறார்கள்—இதை நான் வெறுக்கிறேன். வெள்ளைக்காரர் எப்படிச் சரிசமனாகச் சமுதாய வாழ்வில் நடக்கிறார்களோ அப்படியே நம்மவரும் நடக்க வேண்டும். இன்னும் பெண்ணுரிமையைக் காக்க நான் கூசாது பேசுவேன், பேச்சைச் செயலிற் காட்டுவேன். வீட்டரசியான நான் நாட்டரசியாகவும் முயல்வேன்.

இந்த நூலைக் கோத்த பெண் சக்திகள் என்னை ஆதரிக்கிறார்கள். அதுவே போதும்.

முன்னுரையும் போதும்; இனி நூலைப் படியுங்கள். படித்த பெண்கள் தலைநிமிர்ந்து உரிமையுடன் நடந்து பயிலுங்கள்.

கண்ணாடி போலும்
கஸ்தூரி போலும்
பெண்ணினம் வாழ்க
கண்ணினைப் போலே!

புதுயுக நிலையம்,<br>புதுச்சேரி.

சுத்தானந்த பாரதி.

## ராஜேஸ்வரி-பாஸ்கர்.

பெண்களுக்குச் சம உரிமை அவசியமா இல்லையா? என்ற விவாதம் என்றதுமே பலருக்கு ஆச்சரியம் உண்டாகும். முன்னேற்றத்தின் முன்னணியிலே நிற்பதாக மார்தட்டும் மக்கள் நிறைந்த நகரங்களிலேகூட இம்மாதிரி பிரச்னைகள், இந்த இருபதாம் நூற்றாண்டிலே நடமாடுகின்றன என்றால், ஆச்சரியப்படாமலிருக்கமுடியுமா?

எங்கள் ஊரிலே மகளிர் கழகம். அந்தக் கழகத்தின் ஆரம்ப விழாவின் போது, அழைப்பிதழிலே 'ஆண்களுக்குத் தனியிடம் உண்டு' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மரபுக்கு விரோதமாக 'குறிப்பு' எல்லோர் கவனத்தையும் கவர்ந்துவிட்டது. கேட்பானேன்? சகோதரர்களுக்கெல்லாம் ரோஷம். பொத்துக்கொண்டு வந்துவிட்டது. 'கேவலம் - பெண்களாவது - தனியிடம் கொடுத்து நம்மை ஒதுக்கிவைப்பதாவது' என்றெல்லாம் குமுறினார்கள். என்ன இருந்தாலும் ஆண் சிங்கங்களில்லையா? இதையெல்லாம் பார்க்கும்போது எனக்கு ஒரு உண்மை புலனாயிற்று பெண்களின் ஆதிக்கமும் அதிகாரமும் பரிபூரணமாய் ஓங்கி நின்ற இடத்திலே கூட, தங்கள் உரிமையையும் சுயமரியாதையையும் விட்டுக்கொடுக்க ஆண்கள் இசையமாட்டார்கள் என்று தெரியவந்தது. ஆண்களின் நிலை இப்படி இருக்க, எத்தனையோ வருஷகாலமாய், பெண்ணுலகுமட்டும், தனக்குரிய நியாயமான உரி

மைகளைப் பெருது கலங்கி மருண்டு நிற்பது ஏன்? என்ற புதிரும் என்மனதிலே முளைவிடலாயிற்று,

சரி, விஷயத்திற்கு வருவோம்.

'பெண்களுக்குச் சம உரிமை அவசியமா?' என்ற கேள்வியே அநாவசியம் தான். காலம் முன்னைப்போலிருந்தால் பெண்களும் முன்னைப்போல் வீட்டுக்குள் முடங்கிக்கிடப்பதில் ஆக்ஷேபணையில்லைதான். காலம் மாற, மாற. மக்களின் நடைமுறையிலும் மாறுதல் தோன்றுவது இயற்கை. மக்கள் என்று சொல்லும்போது, பெண்களும் அதில் அடங்கியவர்கள்தானே? இன்று காலம் எவ்வளவோ மாறிவிட்டது. இன்றைய உலகமே கல்வியாகட்டும், கலையாகட்டும், அரசியலாகட்டும் எதற்கும் ஆண், பெண் இருதரப்பினரையும்தான எதிர்நோக்கி நிற்கிறது.

"பெண்களுக்குச் 'சமத்வம்' கொடுத்தால் தான் நாடு உய்யும் என்று சொல்கிருயே, பண்டைக்காலப் பெண்மணிகளால் உலகம் உய்யாமலா போய்விட்டது?' என்று கேட்கலாம். சரியான கேள்விதான். இன்றைய பெண்களின் முக்கியமான உரிமைகளில் ஒன்ருன கல்வியைப் பொறுத்தமட்டில், அக்காலத்திலேயே பெண்களுக்குக் கல்வி அளிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதற்கு இலக்கியத்திலும் சரித்திரத்திலும் தகுந்த பல ஆதாரங்கள் இருக்கத்தான் செய்கின்றன. 'டிரிக்னுமெட்ரியும், கெமிஸ்டிரியும்' கற்பிக்கப்படாவிட்டாலும் காலத்திற்கேற்ற கல்வி அளிக்கப்பட்டு வந்திருக்கின்றது என்பதற்கு எத்தனையோ ஆதாரங்கள், அத்தாட்சிகள் பொருந்து செல்வமும் கல்வியும் பெண்களிடையே பூத்திருந்த காலம் அது. ஏட்டையெல்லாம் பெண்கள் தொடுவதே தீமையென்றும்,

வீட்டுக்குள்தான் பெண்ணைப் பூட்டிவைப்போம் என்றும் மார்தட்டி மல்லுக்கு நின்ற மகானுபாவர்கள் எல்லாம் நேற்றைய ஆசாமிகள்தான். பண்டைத் தமிழிலக்கியங்களையும், சரித்திரத்தையும் புரட்டினோமானால் அந்தக்காலப் பெண்களின் நிலை தெரியவரும். ஆத்திச் சூடியும் அறநெறிச் செய்யுட்களும் இயற்றி, மக்களை நல்வழிப்படுத்திய தோடு இலக்கியப் பிரபஞ்சத்திலே தமக்கும் ஒரு நிரந்தர ஸ்தானத்தைத் தேடிக்கொண்ட ஔவை அந்தக் காலத்தவர்தானே? கல்வி விஷயம் இருக்கட்டும். அரசியல் வியவகாரங்களிலேகூட அந்தக் கால இந்தியப் பெண்கள் தலையிட்டு வந்திருக்கின்றனர் என்று சரித்திரம் சான்று பகருகின்றது. ஆண்களைப்போலவே அரியாசனத்திலமர்ந்து ஆற்றலுடன் ஆட்சிபுரிந்த வடநாட்டு நூர்ஜஹான் பேகமும், தென்னாட்டு மங்கம்மாளும் சரித்திரத்திலே இடம்பெற்றிருக்கவில்லையா? சொத்துரிமை கூட அந்தக்காலப் பெண்மணிகளுக்கு இருந்திருக்கிறது. மனுதர்ம விதிப்படி ஆணையும் பெண்ணையும் சமமாக வளர்த்தார்கள், வாழ்வித்தார்கள் என்பதே இதற்குப் போதுமான ஆதாரம் தானே?

'பெண்மையை நாம் உயர்ந்ததாக நம்மைவிட மேலானதாகக் கருதுகிறோம். பெண்ணைத் தெய்வமாய், தாயாய் நாம் கொண்டாடுகிறோம். இத்தகைய உயரிய நிலையினைப்பறித்து அவர்களையும் ஆண்களோடு சரிசமமானவர்களாக்க முயல்வது கூடாது. ஆத்மார்த்த விஷயத்தில்மட்டும் ஆணும் பெண்ணும் சம அந்தஸ்து உடையவர்கள். லௌகீக விஷயங்களில் அவர்களுக்குத் தனித் தனி தொழில்களை இறைவன் தந்திருக்கிறான். நம்மைப் பெற்று நல்ல வழியில் வளர்த்து இவ்வுலகை உயர்ந்ததாக ஆக்கும் பொறுப்பு அவர்கள் கையில் இருக்

கிறது. அவ்வுரிமையைப் பறித்துவிட்டு 'சம உரிமை' என்னும் பெயரால் அவர்களைக் கீழான நிலைக்குக் கொண்டுவருதல் கூடாது. குடும்பம் என்று ஒன்று இருக்கும்வரை ஆண்-பெண் வித்தியாசம் இருந்தேதீரும், என்றூர், சமத்வம் கொடுக்கக்கூடாது என்று வாதாடும் சகோதர நண்பர் ஒருவர்.

வாஸ்தவம்; உலகம் தோன்றி, ஆண்-பெண் என்று பிரிவு ஏற்பட்ட காலம் முதலே, ஆணுக்கும் பெண்ணுக்கும், அவரவர் தகுதிக்கும், இயற்கைக்கும் ஏற்பத் தனித்தனி தொழில்கள் விதிக்கப்பட்டுவிட்டன என்பதை யாரும் மறுக்கமுடியாது. அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட காரியங்களை அவரவர்களே செய்யவேண்டும் என்னும் நியதி உத்தமமானதுதான். ஆனல் ஆணும்பெண்ணும் ஒத்துழைக்கவேண்டிய காரியங்களும் இருக்கத்தானே செய்கின்றன? அப்படி ஆணும் பெண்ணும் ஒத்துழைக்கிற காலத்திலே இரு தரப்பிலும் அறிவு, ஆற்றல் போன்ற விஷயங்களில் ஏற்றத்தாழ்வு இருக்குமானல் ஒத்துழைப்பது சாத்தியமன்று. எந்த சேவையாயிருந்தாலும், அதை ஆணும் பெண்ணுமாக சேர்ந்து செய்கிற காலத்திலே அவர்கள் நிலையிலே ஏற்றத்தாழ்வு இருந்தால் சேவை உருப்பட்டாற்போலத்தான். இம்மாதிரி விஷயங்களிலேயாவது சமத்வம் கொடுக்கத்தான் வேண்டும் என்பதே என்னுடைய கட்சி.

'பெண்களுக்குச் சமத்வம் கொடுப்பதால் குடும்ப தர்மமே குலைந்துவிடும்' என்று கூக்குரலிடுகிறூர்கள் சில பத்தாம் பசலிகள். மேநாடுகளைப்போல் முழுக்கமுழுக்க சமத்துவம் கொடுக்காவிட்டாலும், தேவையான அளவுக்குக் கொடுப்ப

நால் குடும்ப தர்மம் குலைந்துவிடாது என்று அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதனால் ஆண்மையின் கௌரவமோ பெண்மையின் தூய்மையோ கெட்டுவிடாது. எப்பொழுதுமே சட்டி சுரண்டிக்கொண்டும், குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டும், வீடே கதி என்றிருந்தால், நாலு பேரைப்போல் உலக வியவகாரங்களைத் தெரிந்துக்கொள்வதுதான் எப்படி? வீட்டுக்குள்ளேயே அடைந்துகிடப்பதை விட்டு வெளியுலகிற்கு வந்து அதில் பங்கெடுத்துக் கொள்வதால் 'பெண்மை' மலையேறிவிடாது. பொதுக்கூட்டங்களில் பெண்கள்பேசுவது, ஆண்களுடன் கல்லூரிகளில் படிப்பது போன்ற காரியங்களெல்லாம் சகஜமாய்ப் போய்விட்டது இன்று. அதன் பிறகுங்கூட சமத்வம் என்ற பிரச்னை தீரவில்லையென்றால் அது வேடிக்கைதான்.

சகோதரர்கள் எல்லாம் வருங்காலத்தில் 'புதுமை உலகை' நிர்மாணிப்பதற்காக அரும்பாடு படுகிறார்கள். உலகமே புதுமையாக மாறினால் அதில் அடங்கிய பெண்களும் புதுமைப் பெண்களாக மாறவேண்டியதுதானே? ஞான நல்லறமும், வீர சுதந்திரமும்தானே புதுமைப் பெண்களான 'பேணு நற்குடிப் பெண்ணின்' அம்சங்கள்? கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வரும் டாக்டர் ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மையாரையும், சகோதரி ஸ்ரீமதி சுப்புலெட்சுமி அம்மையாரையும் பாராட்டாதவர் யார்? அரசியலிலே தீவிரமாக ஈடுபட்டுள்ள ஸ்ரீமதி சரோஜினி தேவி, ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட், காப்டன் லட்சுமி முதலியவர்களெல்லாம் புதுமை பெண்ணுலகைச் சேர்ந்தவர்கள்தானே? நம் நாட்டின் ஆக்கத்திற்கே நிலைக்களனாய் விளங்குபவர்கள் தொகுதியிலே இவர்களுக்கும் இடமுண்டு அல்லவா? இப்ப

டிப்பட்டவர்களால் தானே, "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" என்ற வசனமே தேய்ந்து மறையும் கனவைப்போல் இருந்த இடம் தெரியாமல் மங்கிவிட்டது.

"சமத்வம், சமத்வம்—என்று அடித்துக்கொள்கிறார்களே அதைச் சரியான முறையில் பயன்படுத்த முடியுமா பெண்களால்?"—என்று ஒரு கேள்வி - முடியும். 'நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் பொருந்தியுள்ள பெண்களால் நிச்சயமாய் முடியும். பெண்களிலே சமத்வத்தை உபயோகிக்கத் தகுதியானவர்கள் எத்தனையோ பேர். எவ்விதமான சூழ் நிலையிலும், பெண்மைக்குப் பங்கம் வராத முறையிலே தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்று தன்னம்பிக்கையுடைய திடமுள்ள பெண்களுக்குச் சமத்வம் கொடுப்பதை நான் ஆதரிக்கிறேன். பழைமைப் பண்பைவிடாமல், கொறநாட்டுப் புடவையைக் கட்டிக்கொண்டு சமத்வத்தின் பெயரால் எந்தத் துறையில் இறங்கினலும், எந்தத் தொழிலை மேற்கொண்டாலும் நாம் ஆக்ஷேபிக்கமுடியாது-ஆக்ஷேபிக்கவும் கூடாது.

'ஆணும், பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வவையகம் தழைக்குமாம்'—என்று அன்று பாடினர் பாரதி. 'தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே'-என்றெல்லாம் கனவு கண்டார். அவருடைய அந்த அடிகள் எல்லாம், தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரது இதயத்திலும் இன்றும் ஒழித்துக்கொண்டு

தானிருக்கிறது. பாரதியின் கனவை நனவாக்க வேண்டிய பொறுப்பு நம் கையில் இருக்கிறது. இதை மனதில் வைத்துக்கொண்டு 'சமத்வம்' அவசியமா? என்று உங்களையே கேட்டுப்பாருங்கள். சுலபமாக விடை கிடைத்துவிடும். அப்புறம் கூட்ட மெல்லாம் கூட்டி, சம உரிமை வேண்டுமா வேண்டாமா? என்று விவாதம் நடத்தவே அவசியம் இராது. இதெல்லாம் உங்களுக்கேதான் தெரியுமே - நான் சொல்வானேன்?

*மாதர் தங்கள் பழைமையைக் காட்டிலும்*
*மாட்சி பெறச் செய்து வாழ்வமடி!*



3648

★

மண், நீர், காற்று, ஒளி முதலியன சேர்ந்து மரமாதல் போல அடக்கம், பொறுமை, தியாகம், பரலம், இரக்கம், அழகு, தொண்டு முதலிய குணங்கள் சேர்ந்து பெண்மையாகின்றன. சிறு சிறு நீர்த்துளி சேர்ந்து பரந்த நீர் நிலை யென்னும் பெயர் பெறுதல் போலவும், சிறு சிறு பரல்கள் சேர்ந்து மலை யென்னும் பெயர்பெறுதல் போலவும், அடக்கம் முதலிய குணங்கள் ஒன்றி, அவை பெண்மை எனும் பெயர் பெற்றன.

— திரு. வி. க.

★

## கமலா-பாக்கியநாதன்.

இக்காலத்தில்தான் பெண்கள் சம உரிமை கேட்கிறார்கள் என்று நினைப்பது தவறு. பண்டைக் காலத்திலேயே பெண்களுக்கு சம உரிமை இருந்துவந்தது என்று பல நூல்களின் வாயிலாக அறிகிறோம். மிகப்பழமையான நூல் என்று கருதப்படும் தொல்காப்பியத்தில், "ஒத்த கிழவனும் கிழத்தியும்" என்ற பகுதியில் தலைவனும் தலைவியும் குலம் கல்வி, செல்வம் முதலிய பத்து அம்சங்களில் ஒத்திருக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. பெண்களுக்குப் புதிதாகச் சமஉரிமை தரவேண்டியதில்லை; இடையில் இல்லாதிருந்த அச்சம உரிமை மீண்டும் தரப்பட வேண்டும் என்பதே வேண்டுகோள்.

பெண்களுக்கு எந்தெந்த துறையில் சம உரிமை அவசியம் என்று பார்ப்போம். கல்வி, தொழில், வீரம், தேசசேவை என்று நான்கு அங்கங்களாகப் பிரித்து ஒவ்வொன்றையும்பற்றி சிறிது ஆராய்வோம்.

கல்வியை எடுத்துக்கொண்டால், பெண்களுக்குக்கல்வி இல்லாமையினால்தான் நம் நாடு இந்நிலைமையில் இருக்கிறதென்பது நன்கு புலப்படும். ஔவையார் பிறந்து வாழ்ந்த தமிழ்நாட்டிலே மாதருக்கு அறிவுப் பயிற்சி கஷ்டமோ? பெண்களுக்கே ஒரு திலகம்போன்று விளங்கிய அவ்வம்மையார் தன்காலத்துப் புலவர்களின் கர்வத்

தைத் தம் கல்வித் திறத்தால் அடக்கினார். "ஒரு காலில் நாலிலைப் பந்தலடி" என்று "அடி" என்னும் அவமரியாதையான சொல்லை கம்பர் சொன்னதனால் ஔவை வெகுண்டு

*எட்டேகால் லட்சணமே, யமனேறும் பரியே*
*மட்டில் பெரியம்மை வாகனமே—முட்ட மேற்*
*கூரையில்லா வீடே; குலராமன் தூதுவனே,*
*யாரையடா சொன்னாயது" என்று*

ஏட்டிக்குப் போட்டியாக ஒரு சொல்லுக்குப் பத்து சொற்களை அடுக்கிக் கொட்டினார். இன்றும் பெண்கள் கல்வியிலும், வாய்மையிலும், சற்றும் குன்றியவர்களல்ல. அடிமை மோகத்தில் சுழன்றுக் கொண்டிருந்த நம் நாட்டைத் தட்டியெழுப்பி பெண்குலத்தை உயர்த்திய வீர சிரோன்மணி விஜயலட்சுமி பண்டிட்டின் பெருமையை அறியாதார் யார்? அறிந்து புகழாதார் யார்? புகழ்ந்து மகிழாதார் யார்? இடைக்காலத்தில்தான் கால வித்தியாசத்தாலோ அல்லது மற்றெந்த காரணத்தாலோ "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" என்ற கேவலமான மனப்பான்மை நம்முள் எழுந்தது. நாமும் பேச நேர்ந்தது ஒருக்கால் பெண்கள் தங்களைவிட அதிகம் படித்துவிடுவார்களோ என்ற ஐயம் ஆண்களுக்கிருக்கலாம்.

அடுத்தபடியாக தொழிலை எடுத்துக்கொள்வோம்: தொழில் அல்லது வேலை என்ற மாத்திரத்திலேயே பெண்கள் மெல்லியலார். அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது என்று வாயும் மனமும் கூசாமல் ஆண்கள் சொல்லிவிடுகின்றனர். பெண்களின்மீது இவ்வளவு அனுதாபம்கொண்ட அந்த

ஆடவர்களே பெண்களுக்குச் சம உரிமை கொடுக்க மறுத்தால் அது முரண் அன்றோ? நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினதே சாக்கு" என்பது போலாகும் அவர்கள் கதை. சமயம் கிடைத்தபோதெல்லாம் பெண்கள் தங்களுடைய வலிமையை உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளனர். முதன் முதலில் Engineering கல்லூரியில் பெண்களைச் சேர்க்கவில்லை. இப்பொழுதோ பெண்களின் ஆற்றலை உணர்ந்து அவர்களையும் சேர்க்கின்றனர். மற்ற துறைகளிலும் அப்படியே. சில தொழில்களில் ஆண்களைக்காட்டிலும் பெண்களே சிறந்து விளங்குகின்றனர். அவர்களது பொறுமையும், கூர்மையும், விடாமுயற்சியும் அவர்களை உயர்த்துகின்றன. ரஷ்யாவில் சிறிது காலத்திற்குமுன் ஒரு கணக்கு எடுத்தார்களாம். அதாவது ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் பெண்கள் வெளியில் வந்துவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம் அவர்கள் பார்த்தும், செய்தும்வந்த வேலைகளைச் செய்வதற்குப் பணிப் பெண்களைச் சம்பளம் கொடுத்து வைத்தால் அந்நாட்டின் மொத்தபணத் தொகையில் முக்கால் பாகம் இதற்கெனச் செலவாகும் என்ற முடிவை எய்தினார்கள் என்றால் பெண்கள் தங்கள் சிக்கன வாழ்விலும் தியாகத்திலும், தங்கள் இல்லங்களுக்கும், தேசத்திற்கும் எத்தகைய தொண்டு புரிகின்றனர் என்பது வெள்ளிடை மலைபோல் தோன்றும். கல்வி புகட்டுவதிலும், சிகிச்சை செய்வதிலும் பெண்களே சிறந்து விளங்குகின்றனர்.

தலைவனும் தலைவியுமாகச் சேர்ந்து வாழும் போது ஆண் மகனுக்கு எல்லா உரிமைகளும் உண்டு. ஆனால் பெண்ணோ அடிமை. ஆணும்

பெண்ணும் உடன்பிறந்தவர்கள். உடன் பிறந்த வன் ஆளுகிறான். ஆனால் உடன் பிறந்தவள் அடிமை. காலக்கொடுமை! முற்காலத்தில் அரசர் கள் வெளியூர் சென்றிருந்த சமயங்களில் பெண் கள் அவர்கள் தரத்தில் நின்று பாடும் புலவர்களுக் குப் பரிசில் வழங்கினார்கள் என்று பெருந்தலைச் சாத்தனாரின் பாடலிலிருந்து அறிகின்றோம். இக் காலத்திலே, பிச்சையெடுக்கும் ஒருவனிடம் பெண் ணானவள் தலைவனின் தூண்டுதலினால் "அவர் இல்லை, போ" என்று சொல்லுகிறாள். இதுவா ஆண்களின் ஆண்மை? இதுவா அவர்களின் தரு மச்சிந்தை?

வீரத்திலும் பெண்கள் முக்காலத்திலிருந்தே முன்னணியில் நின்று வருகின்றனர். அதுபற் றியே நம் பண்டைக்காலப் பெண்கள் "வீரத் தாய்மார்" என்றபேரும் பட்டமும் பெற்றனர். தன் தந்தையையும், தமயனையும், கணவனையும் சமீபத்தில் போரில் இழந்த ஒருமங்கை போர் முழக்கத்தைக் கேட்டவுடன் சிறிதும் மனக்கலக்க மடையாமல் வீராவேசத்துடன் தன் ஒரே மைந்த னைப் போர்க்களத்திற்கு அனுப்பினாள். "நும்மகன் யாங்குளன்" என்ற வினாவிற்கு "புலி கிடந்து போன குகையே போலே அவனைப்பெற்ற வயிறோ இது. ஆனால் அவனோ போர்க்களத்தில் உளன்" என்று ஒருமாது வீரம்ததும்பப் பதிலளித்தனள். இந்நாட்டில் மாத்திரமல்ல; இதர நாடுகளிலும் பெண்கள் வீரம் படைத்திருந்தனர் என்று சரித் திரம் கூறுகிறது. ஆங்கிலேயரின் ஆட்சிக்கு அடி மையாகும் தருவாயிலிருந்த பிரான்சு தேசத்தை யும் அதன்மன்னனையும் காப்பாற்றி வெற்றியளித் தவர் யார்? ஒருபெண் -ஜோன் அம்மையார் (Joan

of arc) உலகம் போற்றும் மன்னன் ஜஹாங்கீரின் காலத்தில் உண்மையிலேயே அவனது அரசாட்சியைச் செம்மையாக நடத்தியவர் அவர்மனைவி நூர்ஜஹான் அன்றோ?

இப்படியாக எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அந்தந்தத் துறையில் பெண்கள் தங்கள் ஆற்றலையும் வன்மையையும் எடுத்துக் காட்டியுள்ளனர். ஆண்களோடு அவர்களுக்கும் சம உரிமை அவசியம், அதனால் ஒரு தீங்குமில்லை என்று நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

மகாகவி பாரதியார் ஆணும்பெண்ணும் நிகர் எனக்கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்'' என்று அஞ்சாது முழங்குகின்றார். பெண் அடிமையுற்றால் மக்களெல்லாரும் அடிமையுறல் வியப்போ? என்றும், அவர் வாதிக்கிறார். நம் நாடு முன்னேறி விடுதலைபெற வேண்டுமானால் முதலில் பெண்களுக்குச் சம உரிமை அவசியம் என்று மேற்கூறியவற்றால் நாம் நன்கு அறிந்துக் கொள்ளலாம். அறிந்தபின் அவ்வாறு செய்வதே நன்று.



26148

## ந. ந. ஆனந்த நாயகி.

“பெண்கள் ஆண்களைவிட ஆற்றல் வாய்ந்தவர்களா? என்பது அர்த்தமற்ற கேள்வி. சில துறைகளில் அவர்களைவிட அதிகத் திறமையுடையவர்கள் என்பதை எந்த ஆண்மகனாவது மறுக்க முன்வரமுடியுமா? பெண்கள் உரிமைகளைக்குறைத்துவிடலாம், அல்லது பறித்துஅவர்களை அடிமையாக்கிவிடலாம் என்று சில மந்தமதியினர் கனவு கூடக் காண்கின்றனர்.

இத்தகைய கனவுக்குக் காரணம் இடைக்காலத்தில் பெண்கள் வீழ்ச்சியுற்றிருந்ததுதான். அதேநிலையில் மீண்டும் அவர்களை - இன்று எழுச்சி பெற்றுள்ள வீர நாரீமணிகளை – ஆக்கிவிடலாம் என்றெண்ணுவது எத்தகைய பேதமை? அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு? எனப் புல்லறிவாளர் சிலர் புகல்வதை இன்று கேட்டீர்கள்! தங்களுக்கு வழிகாட்டி நின்ற கண்ணின்மணியைப் புண்ணாக்கிக்கொள்ளும் மதியீனம் இது என்று நான் சொன்னால் அதில் தவறேது? இடைக்காலத்தில் பெண்கள் ஒழிந்ததாலல்லவா, இன்று அதை அளிப்பானேன் என்று சிலர் எண்ணத் துணிகின்றனர்.

பரந்த மனம் படைத்த ஆண்கள் இல்லையென்று நான் சொல்லவில்லை. பெண்ணின் பெருமையை உணர்ந்த பெரியார்கள் பலர்.

“எட்டும் அறிவில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி”

என்று பாடியவர் ஒரு உண்மையான ஆண் மகன். இத்தகையோர் பெண்கள் ஆண்களோடு சரிநிகர் சமானமே என்றுகூறக் கூசுவதில்லை.

உண்மையிலேயே கல்வி, வீரம் இல்வாழ்க்கை, சமயம், அரசியல்போன்ற ஒவ்வொரு துறையிலும் ஆண்களோடு பெண்களும் சமமாக வாழ்ந்த கால மும் ஒன்றிருந்தது. ஆனால் உலகின் பொல்லாத காலம், அதுபின்னர் மாற்றமுற்றது இன்று மீண்டும் விழிப்பு, புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஆணைப்போல் பெண்ணும் உரிமையோடு வாழ்ந்தால்தான் உலகம் உண்மை உலகமாகத் திகழும் இல்லையேல் நானிலம் நன்னிலையுருது போகும் என்பது தெளிவு.

பண்டை நாளில் வள்ளுவனும், கம்பனும், ஒட்டக்கூத்தனும் வாழ்ந்ததுபோல ஔவையும், காக்கைப்பாடினியும், வெள்ளி வீதியும், எயினியும், பெருங்கோப் பெண்ணும் புகழ் மிகு வாழ்க்கை நடாத்தியுள்ளனர். மருத்துவத்திலும், விஞ்ஞானத் திலும். ஆண்களைவிடப் பெண்கள் பெரிதும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

மேலும் வீரம் என்பது பிறப்பதெங்கே? பெண் மையிலன்றோ? பெண்தான் ஆணுக்கு வீரப் பாலூட்டி வளர்த்தவள். இல்லையேல் வீரம் என்ற பண்பே ஆணிடம் இருக்க முடியாது. வீரப் பெண் மணிகள் வரலாறுகள் நிறைந்த நம் தமிழ் நாட்டில் பெண்டிர் வீரத்தைப்பற்றிப் பேசுதலே இழுக்கு. தன் சிறு பாலனைக்கூடச் செருமுனைக்கு அனுப் பிய வீரத் தாய்கூட இங்கே வாழ்ந்திருக்கிருள். நீதி வழுவாது ஆட்சி செலுத்திய அரசிகளுக்குத் தான் பஞ்சமா? இராணி மங்கம்மாளும், அல்லி

ராணியும் எத்தகையவர்கள் என்பதைக் கூற வேண்டுமா? இதுபோலவே பக்தி மார்க்கத்தில் புகழ்பெற்ற ஆண்டாளும், மீராவும், காரைக்கால் புனிதவதியும், சாரதாமணியும் எத்தகையவர்கள்.

இன்னும்தான் என்ன? ஆண்களின் ஆதரவு அதிகமின்றியே சிறந்த பெண்கள் பலர் தோன்றவில்லையா? அன்னிய மொழியில் கவிதைகள் எழுதி அகில உலகத்தின் புகழ் மொழியையும் பெற்ற கவியரசி சரோஜினி, அகில உலக அவையில் இந்தியாவின் குரலை எதிரொலித்த விஜய லட்சுமி, எதிரிகள் நாட்டில இந்திய விடுதலைக்காக இணையற்ற பெண் படை யெழுப்பிய லட்சுமிதேவி ஆகியோர் சாதாரணமானவர்களா?

எத்துறையிலும் ஆணொடு பெண்ணும் சமமாக வாழ இயலும் என்பதை இது காட்டவில்லையா? 'ஆணின்றிப் பெண் இல்லை, பெண்ணின்றி ஆண் இல்லை, எண்ணிருவர் சேர்ந்ததே இவ்வுலகு" என்ற நற்கூற்றை யாவரும் உன்னிப்பார்க்க வேண்டும். பெண்கள் ஆண்களோடு சமமாக வாழப் பிறந்தார்களேயன்றி அடிமைச்சிகளாய் சிற்றடிமை வேலை செய்து மாக்கள்போல் மடியப் பிறக்கவில்லை என்பதை யாவரும் உணரவேண்டும். உணர்ந்தால், உணர்பவர் அறியாத தம் சகோதரர்க்கு எடுத்துரைத்து நேர்வழிப்படச் செய்தால் உன்னத நிலைதானே வந்தெய்தும் என்பது திண்ணம்.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்" —(பாரதியார்)

**C. R. சரஸ்வதி.**

'சம உரிமை' என்ருல் என்ன ? கல்வி, செல்வம், சமூகம், உத்தியோகம், அரசாங்கம் முதலிய விஷயங்களில் ஆண்களுக்கு எவ்வளவு சுதந்திரம் உண்டோ அவ்வளவு சுதந்திரம் பெண்களுக்கும் இருக்கவேண்டும் என்பதுதான்.

கல்வியில் சம உரிமை வேண்டும் என்பதை ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். ஆனுல் அக்கல்வி கூடப், பெண்களுக்கு ஏற்றதாயிருக்கவேண்டும். தற்காலத்துப் பெண் - கல்வியால் வெளிப்படை நாகரீகம் இருக்கிறதே ஒழிய, பெண்களுடைய குணம், நடத்தை முதலியன சீர்திருத்தமடையவில்லை.

B. A. M. A, முதலிய பெரிய பட்டங்கள் பெற்ற பெண்கள் நவீன நாகரீக ஆடையாபரணம் அணிதல் முதலிய ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபடுகிருர்கள். ஆகையால் அக்கல்வியானது அவர்களது குணம், நடத்தை முதலியன சீர்திருத்தமடைவதற்கு உதவி செய்வதில்லை. ஆகையால் கல்வி பயின்ற பெண்கள், பணத்தையும், அதிகாரத்தையும் பெரிதாக மதித்துக் குணத்தை அறவே ஒழிக்கின்றனர், அன்பு, ஈகை, திருப்தி, சாந்தம், இரக்கம் என்னும் சற்குணங்களுடன் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலியவைகளும் அவர்களைவிட்டு நீங்குகின்றன.

கல்வி கற்பதன் நோக்கம், பெண்கள் புத்திசாலிகளாகவும், குணவதிகளாகவும் திகழ்வதற்கல்

லவா? அதைவிட்டு நம் பெண்கள் கல்வி பயின்ருல், குடித்தன வேலைகள் செய்வது அகௌரவம் என்று தவருகக் கருதுகிருர்கள். சாதாரணமாய் ஒரு படித்த பெண் தான் சாப்பிடும் தட்டைக்கூட அலம்புவது கேவலம் என்று கருதுகிருள். அப்படியிருக்கும்போது அவள் துடப்பதைத் தொட்டுப் பெருக்குவாளா?

நம் முன்னோர்கள் எல்லாத் தொழிலும் நற்ருழிலே என்று கூறினர்கள். அச்சு இருந்தால் அல்லவோ தேர் நகரும். அதைப்போல், நம் சமூகத்தில் சகலவிதமான கடமைகளும் செய்தால்தான் ஊருடன் கூடி மனமொத்து வாழலாம். வீடெல்லாம் மாடியாஞல் அஸ்திவாரம் போடுவதெங்கே? இதை அறிந்தல்லவா நம் சர்வகலாசாலையில் கூடப் பெண்களுக்கு படிப்பு வேறு விதமாக இருக்கவேண்டும், அதாவது அவர்களுக்குவீட்டுக் குடித்தனம் நடத்துவதற்கு உதவி புரியக்கூடிய கல்வி கற்பிக்கவேண்டும் என்று பாடத்திட்டம் தயாரித்து வருகிருர்கள்!

முற்காலத்தில் சாவித்திரி, நளாயினி முதலியவர்கள் எக்கலூரியில் சென்று **B.A, M.A,** பட்டங்கள் பெற்ருர்கள்? தத்தம் கணவர்கள் பொருட்டு அவர்கள் எத்தகைய கஷ்டங்களை அனுபவித்தார்கள்? அவர்கள் அறிவிலும், கல்வியிலும், அழகிலும், குணத்திலும், ஏதாவது குறைந்தவர்களா? அவர்கள் தங்கள் கணவரைத் தெய்வமாகப் பாவித்து வந்தார்களே தவிர சமஉரிமை வேண்டுமென்று போராடவில்லை. அதனலல்லவோ இந்நாரீமணிகளின் புகழ் இன்றும் குன்றின்மேலிட்ட தீபம்போல் எங்கும் பிரகாசிக்கிறது!

இப்பொழுது செல்வத்தை எடுத்துக்கொள்வோம். கணவன் தன் வருமானம் முழுவதையும் மனைவியிடம் கொடுப்பது பிசகு. ஏனென்றால் பெண்களிடம் பணம் கிடைத்தால் அவர்கள் பல வழிகளில் செலவழித்து விடுவார்கள். வீணுகவிலையுயர்ந்தசேலை, ஆபரணம் முதலியவற்றில் பணம் செலவழிக்கப்படும். ஆகையால் வீட்டுச்சாமான்கள் வாங்குவதற்கு மாத்திரம் பெண்களிடம் சிறிதளவு பணம் கொடுத்துவிட்டு, மற்றபடி பிள்ளைகளின் கல்விச் செலவு வருங்காலத்திற்குச் சேர்த்தல் முதலிய காரியங்களை ஆண்களே பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

உத்தியோகத்திலும் பெண்களுக்கு ஆண்களுடன் சம உரிமை இருத்தல் கூடாது. பெண்களுக்குச் சிலஉத்தியோகங்கள் வகிக்கக் கூடுமான பலம் இல்லை. பெண்களின் தேகம் மிகவும் மென்மை வாய்ந்தது. அவர்களால் பலத்த சாமான்களை எடுக்க முடியாது இதை முன்னிட்டுத் தான் **Engineering** கல்லூரியில் சமீபகாலம்வரை பெண்களைச் சேர்க்கவில்லை. ஆனல் கடந்த சில வருஷங்களாகப் பெண்களை அக் கல்லூரியில் சேர்த்துவருகின்றனர். அப்படியும், மற்ற கல்லூரிகளில் சேருவதுபோல் இத்துறையில் அவ்வளவு பெண்கள் சேருவதில்லை. ஏதோ வருஷத்தில் இரண்டொருவர் சேருகின்றனர். இதிலிருந்து பெண்களால் கடுமையான வேலைகளைச் செய்யமுடியாதெனத் தெரிகிறதல்லவா? இதை முன்னிட்டுதான் இன்றும் பெண்களை (I. C. S.) துறையில் அனுமதிப்பதில்லை. ஆகையால் நம்மால் செய்யமுடியாத காரியத்தில் நாம் ஏன் தலையிட வேண்டும்?

தவிர சிருஷ்டிக் கர்த்தாவான கடவுள் இந்த இருபதாம் நூற்றாண்டில் நடக்கும் இவ்விபரீத வாக்குவாதத்தைக் கேட்பாரானல் அவருக்கே பொறுக்கமுடியாத சிரிப்பு வந்துவிடும். கலிகாலக் கோலமே என்று திகைப்பார்! அவர் ஆண் வேறு பெண் வேறு என்று ஏன் இருபாலரைச் சிருஷ்டித்தார்? எல்லோரையும் குயவன் பானையைப் போல் ஒரே அச்சில் போட்டு எடுப்பது சுலபமாயிருந்திருக்குமே! ஏன் இந்த வித்தியாசம்? இதிலிருந்தே தெரியவில்லையா. பெண்கள் சம உரிமை கேட்பது நகைப்புக்கு இடமென்று?

பெண்களின் கடமை இல்லறம் நடத்தல், கணவன் மனம் கோணமல் நடத்தல் முதலியனவாகும் ஆண்களின் கடமை, பொருள் சம்பாதித்து மனைவி மக்களைக் காப்பாற்றலும் தம் நாட்டைக்காப்பாற்றுதலுமாம். இதைவிட்டுப் பெண்கள் ஆண்கள் செய்யும் தொழில்களைச் செய்ய முடியுமா? அல்லது ஆண்கள்தான் பெண்கள் செய்யும் தொழில்களை செய்ய முடியுமா? என்னபேதமை! உங்கள் விருப்பப்படி சமஉரிமைவேண்டுமென்றுல் உலகத்தையே அழித்து மறுமுறை சிருஷ்டிக்க வேண்டும்போல் அல்லவோ இருக்கிறது!

பாருங்கள்! எத்தனையோ பெண்கள் நாங்கள் ஆண்களைப்போலவே இருக்கப்போகிறோம். ஆண் காற்றே உதவாது என்று வீரம் பேசினர்கள். டென்னிசன் (**Tenyson**) எழுதிய 'ப்ரின்ஸஸ்' (**Princess**) என்னும் காவியத்தில், கதாநாயகியாகிய அந்த இளவரசியினுடைய வைராக்கியம் என்ன வாயிற்று? ஆண்காற்றே உதவாது என்று பெண்கள் இராஜ்யத்தை ஸ்தாபனம் செய்தாள். ஆனல் ஒரு இளவரசனைக் கண்டதும், வைக்கோற் போரில்

ஒரு தீக்குச்சி வைத்தாற்போல் அவள் பூண்ட விரதங்களெல்லாம் வீணே எரிந்து சாம்பலாயின.

மற்றும் எத்தனையோ பெண்மணிகளைப் பற்றி நாம் சரித்திரத்தில் படித்திருக்கிறோம். அல்லி அரசியின் சபதம் என்னவாயிற்று? தாகூர் எழுதிய சித்ராவின் கதி என்னவாயிற்று? கடைசியில் வேண்டாம் என்று அலட்சியம் செய்த ஆண்கள் காலில் அல்லவோ சரணாகதியடைய நேரிட்டது!

மேலும், எதற்காகப் பெண்களுக்குச் சம உரிமை வேண்டும்? நாம் என்ன தாழ்ந்த நிலையிலா இருக்கிறோம்? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். பார்த்தால் சகல விஷயங்களிலும் நம்மையே மேல் என்பதை ஒப்புக்கொள்வீர்கள்.

குடும்பத்தின் குல விளக்கு ஓர் பெண்; சிருஷ்டித்தாய் ஓர் பெண்; குழந்தைகளை வளர்த்து, நல்வழியில் நடத்தித் தேச சேவையில் உணர்ச்சி எழுப்புவதும் அவளே. ஒருதேசம் முன்னேறுவதற்கும் பின்னடைவதற்கும் வேண்டிய மந்திரம் அவள் கையிலேதான் இருக்கிறது. தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும். ஆதலால் "தொட்டிலை ஆட்டும் கைதான் செங்கோலை ஆளும் கை" என்று ஒரு ஆங்கிலப் பெரியார்கூடச் சொல்லியிருக்கிறார். நம் பழந்தமிழ் மூதாட்டியாகிய ஔவை கூறுவதைப்பாருங்கள்! "அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற போது, தாய்க்கே முதல் ஸ்தானத்தைக் கொடுத்தார்.

மற்றும் மற்ற தேசங்களைக்காட்டிலும் நம் ஊரில் பெண்களுக்கு உயர்வான நிலைமை கொடுத்திருக்கிறார்கள் கவனியுங்கள். சாட்சாத் கல்வித் தெய்வம் ஓர் பெண் சரஸ்வதி, தனத்தின் தெய்வம் ஓர்பெண்—துர்க்கை. மேலும் இவ்வுலகத்தை நடத்

தும் 'சக்தியும்' ஓர்பெண். அவளேயே ஒரு ஸ்திரீ தெய்வமாகப் பூஜிக்கிறார்கள் நம் ஆண்கள். ஆக நம்தேசமே இந்திய மாதா, பிதா அல்ல! நம் பாஷையோ தாய்ப்பாஷை, தந்தை பாஷையல்ல!

இப்படிப்பட்ட ஹிமாலயபர்வதம் போன்ற உயர்ந்த நிலைமையை விட்டு நாம் ஏன் ஆண்களுடன் சமஉரிமைக்குப் போராடவேண்டும்? ஆண்கள் படும் கஷ்டங்களை நாமே பிரதிதினமும் பார்க்கிறோம். பாவம்; ஆடவருக்கு உத்தியோகக்கவலே, பணக்கவலே, மற்றும் குடும்பக்கவலே. நெற்றி வியர்வை நிலத்தில்விழ அவர்கள் அல்லும்பகலும் உழைக்கவேண்டியிருக்கிறது அவர்கள்கூடப் பல தடவை நம்மைப் பார்த்து "உங்களுக்கென்ன அம்மா" நீங்கள் சுகவாசிகள் குடும்ப தேசத்து ராணிகள் ஆகா? எப்படிப்பட்ட பாக்கியவதிகள்! நாங்களும் ஏன் பெண்ணுகப் பிறக்கவில்லே?" என்று புலம்பிப் பரிதபிக்கிறார்கள்.

அப்படி இருக்க, நாம் நம் சமூகத்திற்கே ஏன்? உலகத்திற்கே உயிர்நிலையாய் இருக்கும் உன்னத நிலைமையைவிட்டு ஏன் ஆண்களுடன் சமமாக இறங்கவேண்டும்? கருடா சுகமா? என்று பாம்பு கருடனைப் பார்த்துக்கேட்டபொழுது, கருடன் என்னசொல்லிற்று? அவரவர் இருக்கும் இடத்திலே இருந்து மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டால் அதுவே சுகம் என்றது. அதுபோல் நாம் இப்பொழுது இருக்கும் ஸ்தானத்திலேயே இருந்துகொண்டு, ஆண்களுடன் சமஉரிமைக்குப் போராடாமல் இருந்தால் அதுவே சுகம். நுணலும் தன்வாயால் கெடும் என்பது ஞாபகம் இருக்கட்டும். கைப்பழத்தைவிட்டு துரட்டிப் பழத்துக்கு ஏன் ஏமாறப்போகிறீர்கள்?

"தமிழ் நீ"

**நான்** ஒரு கிராமியப்பெண். நவநாகரிக நாரீ மணியல்ல. கல்லூரியில் பயிலும் புதுமோஸ்தர் பெண்கள் மூவர் சம உரிமை வேண்டுமென்கிறார்கள். கல்லூரி மாணவிகள் சமஉரிமைக்குப் போராடுவதைவிட, என்போன்ற மணமாகிய கிராமியப் பெண் போராடினால் அதற்கு அளவற்ற சக்தி உண்டு. ஆற்றல் உண்டு. கண்ணாடிக்கண்களுடன், ஒட்டிய கன்னத்துடன், கூட்டுநெஞ்சுடன், முருங்கைக்காய் கைகளுடன் காட்சியளிக்கும் கல்லூரி மாணவிகளின் போராட்டத்தைவிட என் போராட்டத்திற்கு சக்தி உண்டு.

"சாய்வு நாற்காலியில் கொலுவிருக்கும் சாயச் சீமாட்டிகளைவிட நாலுகுடம் நீர் சுமந்து மளமள வென்று அறுசுவையுடன் உணவளிக்கும் கிராமியப்பெண்ணே நலம்" என்று கவியோகி சுத்தானந்த பாரதியார் சொல்லுகிறார்.

சுத்தானந்தர் போற்றும் கிராமியப்பெண்ணின் போராட்டத்திற்கு சக்தி இல்லாமலா போகும்?

யரோ ஒரு அப்பாவி, 'பெண்புத்தி பின்புத்தி' என்றானாம். அவன் இப்பொழுது இருந்திருந்தால் அப்பாவியை நாடு கடத்திவிடுவோம் அறிவுத் துறையில் ஆண்களோடு பெண்களும் நிகராவார்கள் என்பதற்கு எவ்வளவோ சான்றுகள் உள.

சிலசமயங்களில் நாம் ஆடவர்களை எவ்வளவு பாடுபடுத்தி இருக்கிறோம். நம்மைக்கண்டு ஆடவர்கள் அஞ்சுகிறார்களே! சைனாகடையோரத்திற்கும், ஜவுளிகடைக்கும் அழைத்துச் செல்ல ஆடவர்களுக்கு அச்சம்தானே? ஆடவர்களைவிட நமக்கு அதிகமாக உரிமை இல்லையா என்ன?

சம்பளம் பெற்றதும் கண்டபடி கன்னாபின்னா என்று செலவுசெய்து விடுவோம் என்று நன்குணர்ந்த ஆடவர்கள் நம்மிடம் அடைக்கலம் புகுந்து ஊதியம் பூராவையும் நம்மிடமன்றோ கொடுத்து வைக்கிறார்கள்!

திருமணவாசலில் மணமகளையும், மணமகனையும் சற்று உற்று கவனியுங்கள், யாருக்கு செலவு அதிகமென்று. மணமங்கைக்குத்தானே அதிக செலவு செய்கிறார்கள். அப்படியிருக்க யாருககுச் சமஉரிமை இல்லை?

நாம் சமஉரிமைக்காக தீரமாகப் போராடியாக வேண்டும், செந்தமிழ் நாட்டில் பல நூற்றாண்டுகளாக பெண்கள் அடுப்பங்கரைப் பூச்சிகளாக இருக்கிறார்கள். இன்னும் இந்நிலை மாறவில்லை. அறிவுத்துறையில் பெண்கள் ஆண்களைவிட மேம்பட்டவர்களென்று சங்க நூல்களைச் சங்கையறக் கற்ற புலவி மணிகள் பலர் நிரூபிக்கத் தயாராய் இருக்கின்றனர். அப்படியிருக்க நாம் ஏன் ஆடவர்களைப்போல் எல்லா அலுவலகங்களிலும் புகுதல் கூடாது என்று கேட்கிறேன். சில ஆடவர்கள் பெண்களிடம் அட்டகாசமும், ஆர்ப்பாட்டமும் செய்வதை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். “அதிலே உப்பில்லை, இதிலே காரமில்லை, எந்த

உதவாக்கரைச் சட்டினி இந்தா, குழம்பை உன் தலையிலே ஊத்திக்கோ'' அம்மம்மா! இன்னும் என்னென்னவோ சொல்லி அட்டகாசமும், ஆர்ப் பாட்டமும் செய்கிறார்களே! இந்த பொல்லாத ஆடவர்கள். இந்த ஆடவர்கள் கொஞ்சகாலம் அடுக்களையில் வேலை செய்தால்தான் என்ன? குடி முழுகியா போய்விடும்?

படபடக்கும் தேசீயக் கவிகளால் நசித்து விடும்போல் இருந்த தமிழர் சமுதாயத்தை முது கெலும்பு கொடுத்து நிற்கவைத்து பெண்கள் சம உரிமைக்காக பெரும் போராடிய உலக மகாகவி பாரதியார் இப்பொழுதும் மண்ணுக்குள் மறைந்து தவம்புரிகிறார். அழியா அவருடைய ஆத்மாவா வது சாந்தி அடையட்டுமே! வீரப் பெண்மணி களே! வீர நாரீமணிகளே !! வீராங்கனைகளே !!! இன்றே ஒன்றுபடுங்கள். நாம் இனி என்ன செய்யவேண்டும் தெரியுமா? சகோதரி பாஸ்கர் சொல்லியதைப்போல இனி நாம் சம உரிமைக் காகப் போரிடும் போராட்டங்களில் "ஆண்களுக் குத் தனி இடம் உண்டு" என்று விளம்பரப்படுத்த வேண்டும். நாம் செல்லும் ஊர்வலங்களில் போஸ் டர்கள் (**Posters**) தயார் செய்துகொள்ளவேண்டும்.

பெண்மணிகளாகிய நாங்கள் இனி அடுப்பங் கரையில் வேலை செய்வோம் அல்லோம்; அடுப்பங் கரை வேலை இனி ஆடவருக்கே!

தட்டுமுட்டு சாமான்களை நாங்கள் கழுவுவோம் அல்லோம்! இனி ஆடவரே அதனைச் செய்க.

பெருக்கவும் மாட்டோம்! கூட்டவும் மாட் டோம்! (கழனி வெளிகளில்) நாற்று நடவும் மாட் டோம். அதனையும் இனி ஆடவரே செய்க.

மேலே சொல்லியபடி இன்றுமுதல் நாம் போராட்டத்தில் தீவிரமாய் இறங்கவேண்டும். சோதரிகளே. துள்ளி எழுங்கள்!

இப்போரரட்டத்தில் நாம் வெற்றி பெறுவது சிரமமானல் இருக்கவே இருக்கிறது வேலை நிறுத்தம். நாம் எல்லோரும் வேலை நிறுத்தம் செய்வதற்குள் ஆடவர்கள் அனைவரும் கௌரவமாக ஆபீஸ் வேலைகளை விட்டுவிட்டு அடுப்பங்கரை வேலைகளில் ஈடுபடுவார்களாக! ஆடவர்களைப் போல் நாமும் ஹேட்டையும், சூட்டையும் போட்டுக் கொண்டு (ஆடவர்களைப்போல்) டால்டம்மாரம் போட்டுக்கொண்டு தாட்பூட் என்று நடவாமல் பெண்மைக்குரிய அடக்கத்தோடு பணிவாக நடந்து அடக்கமாயிருந்து ஆடவர்களைவிட அரிய பணி செய்வோமாக!

"பெண்ணைப் பழிக்காதே;
பெண்ணை யிழிக்காதே;
பெண்ணைப் பெருமைப்படுத்து".

(யோக சித்தி)

## கே. வி. ராஜலக்ஷ்மி.
## கே. வி. வீரராகவன் B. A., B. L.,

**ஆணின் அலறல்:-** பெண்களுக்கா சம உரிமை? போச்சு! குடி முழுகிப்போச்சு! சொத்து சுதந்திரம் முதற்கொண்டு அனைத்திலுமா பங்கு? ஏற்கெனவே பெண்கள் நம்மை மதிப்பதே இல்லை அப்புறம் கேட்கவேண்டியதே இல்லை; தெரியாமலா "இந்திரன் கெட்டதும் பெண்ணாலே" என்றெல்லாம் பாடிவைத்தார்கள் பெரியோர்கள்?

இன்றைக்கிருப்பதைவிடவா இன்னும் சுதந்திரம் வேண்டும் பெண்களுக்கு? இந்தப்பெண்கள் பேசும் பசப்புமொழிகளையும் போடும்கூக்குரல்களையும் கண்டால் நாம ஏதோ அவர்களை அடிமைகளாக்கிப் படாதபாடு படுத்துவது போலன்றோ தோன்றுகிறது! உண்மையில், நான் கேட்கிறேன், இப்படியெல்லாம் அவர்களைப்பேச அனுமதித்திருக்கிறோமே, இதிலிருந்தே தெரியவில்லையா நாம் அவர்களுக்கு அளித்திருக்கும் சுதந்திரம்?

சொத்திலும் உத்தியோகத்திலும் போட்டியிட முன்வரும் இந்த வீரநாரீமணிகள் ஆண்களைப் போல் உழைக்க முன்வர முடியுமா? போட்டியிட்டு முன்வந்தாலும் அவ்வப்போது மாதந்தோறும் மூன்றுநாளோ, கருவுற்ற காலத்து மாதக்கணக்கிலோ ஓய்வெடுத்தாகவேண்டும் என்று இறைவன் எழுதின எழுத்தை இவர்களால் மாற்றியமைக்க முடியுமா?



3648

அப்படி நாம் இவர்களைக் கேவலமாகவா நடத்துகிறோம்? பெண்டாட்டியை தலைமேல் வைத்துக்கொண்டு கூத்தாடாத புருஷனும் உண்டா? வீட்டோடு இருப்பதனால் பெண்கள் பெருமை குறைந்துவிட்டதா? ஆண் நாட்டுக்கரசன்; பெண் வீட்டுக்கரசி; இதில் என்ன தப்பு? கஷ்டப்பட்டுக் காசுபணம் சேர்ப்பவன் புருஷன், அதைச்செலவு செய்பவள் பெண்! இந்த உரிமையை விடவா இன்னும் ஒரு உரிமை?

தலைமுறை தலைமுறையாய் வந்துவிட்ட வழக்கத்தை மாற்றியமைப்பது தகுமா? தொன்று தொட்டு இன்றுவரை பதிபக்திக்கும் கற்பு நிலைக்கும் பேர்போன நம்நாடு இன்றுகிடக்கும் அலங்கோல நிலைபோதாதா? குஷ்டரோகி என்றும் பாராமல் கணவனைச்சுமந்து பணிவிடை புரிந்த நளாயினியைப்போல் ஒரு ஸ்திரீ - ஒரே ஒரு ஸ்திரீ - இன்றைய உலகில் அகப்படுவாளா?

ஆணின் துணையின்றி, ஆண் மகனின் ஆதரவில்லாமல் பெண் உலகத்தில் முன்னேற முடியுமா? இந்த உண்மையைச் சொன்னதற்காக மனு பழிக்கப்படுகிறான். ஆதரவளிப்பதுடன் மட்டும் நாம் நின்றோமா? அவர்களை வீட்டு எஜமானியாகவே செய்திருக்கிறோம்!

ஆய்! எஜமானிகள்தான் இன்று தங்கள் தாசர்களிடமிருந்து சுதந்திரம் கேட்கிறார்கள்! இதற்கு ஆண் மக்களும் அமோகமான ஆதரவளிக்கிறார்களே, அந்த வெட்கக்கேட்டை என்னவென்று எடுத்துச்சொல்வது? இனி இந்தப் பெண்களிடமிருந்து நாமல்லவோ சுதந்திரப் பிச்சை கேட்கும் நிலைவந்துவிடும்போலிருக்கிறது! அந்தோ ஆண்

மகனே! மதிமயங்காதே! மதிமோசம் போகாதே! பெண்ணின் கண்ணம் புகண்டு கலங்கிப் பித்த ராய்த் திரிந்தது போதும்! இனி விழித்தெழு! எதிர்த்து நில்! எதை இழந்தாலும் பொருளாதார சுதந்திரத்தை மட்டும் பறிகொடுத்து விடாதே! ஜாக்கிரதை!

**பெண்ணின் பதறல்:—**

நமக்குமா சுதந்திரம்! நல்லகாலம் நமக்கா? நான் காண்பது கனவா? "சமஉரிமை அளிப்பதா, கூடாதா"? என்பது பிரச்னையா? அதைப்பறிப்பதற்கு நாமிருக்க அளிப்பதற்கு இவர்கள் யார்? இதில் ஏதோ மர்மம் மறைந்திருக்கிறது! சூது நிறைந்திருக்கிறது!

அன்று முதல் இன்று வரை பழிச்சொல்லைச் சுமந்து சுமந்து பெண்ணுள்ளம் பணிவே இயற்கை என்று எண்ணி விட்டது. மட்டான பழிச்சொல்லா "பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசு" என்றே ஒரு பெரியார் நம்மைப்பாடிவிட்டார் நம்நாட்டில் மட்டுமல்ல; எந்த நாட்டிலும் பெண்ணைக்கண்டால் ஏச்சும், ஏளனமும்தான். கன்னிப்பெண்ணுக்கு வேண்டியது கனவன் ஒருவனே! அவன் கிடைத்ததும் அவளுக்கு எல்லாம் வேண்டும்!" என்பது ஒரு ஆங்கிலப்பழமொழி. "சுதந்திரம்! சமத்துவம் சகோதரத்துவம்!" என்று கொக்கரித்த பிரெஞ்சு நாட்டிலே ஒரு பழமொழி, "உங்கள் நாயைக் கடைசிவரை நம்புங்கள்; உங்கள் ஸ்திரீயை முதல் சந்தர்ப்பம் ஏற்படும் மட்டும் நம்புங்கள்!" என்கிறது. "காரிகை, காற்று, காசு—இவை மூன்றும் மாறிக்கொண்டே இருப்பவை" என்கிறது ஒரு

ஸ்பானியப் பழமொழி. இப்படி நாடு தோறும் நம்மை ஏசிவரும் இவர்களா நமக்கு சுதந்திரம் அளிக்கப்போகிறார்கள்?

ஆனால் நல்லகாலமாய் நாம் பாரதி சகாப்தத்தில் வாழ்கிறோம். பிறந்ததும் தந்தைக்கடிமை, மணந்ததும் மணாளனுக்கடிமை, கைம்பெண்கள் மகனுக்கடிமை என்னும் நியதி மாறிவிட்டது. உண்மையை உணர்ந்த ஆண்மகனும் இன்று

"வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா,
மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்,
கலி அழிப்பது பெண்கள் அறமடா!"

என்று ஆர்ப்பரிக்க ஆரம்பித்துவிட்டான். ஆகவே பெண்ணுரிமையின் அவசியத்தைப்பற்றி அதிகமாகக் கூறவேண்டியதில்லை.

ஆனால் ஆணுடன் "சரிநிகர் சமானமாய்" வாழப்பெண்ணுக்கு உரிமை அளிப்பதா அல்லது சில துறைகள் ஆணுக்கும், சில பெண்ணுக்கும் என்று பகுத்தளிப்பதா என்பதுபற்றி அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். உண்மையைத் திரித்துக்காட்டும் ஆண் நிபுணர்கள் இன்று ஆண் மகன் நாடாள்கிறான், பெண் வீடாள்கிறாள் என்றெல்லாம் மழுப்பி நம்மை மயக்க முயல்கிறார்கள். பெண்கள் பலரும் மதிமயங்கி "ஆமாம்" போடுகிறார்கள். வீட்டுக்கரசியாம்! கிளியும் தன் கூண்டுக்குத்தானே ராஜா!

நாலுகாசை நம்மேல்வீசி எறிவதுடன் ஆணின் தொல்லை தீர்ந்துவிடுகிறது. அதைவைத்துக்கொண்டு கடனில்லாமல் குடித்தனத்தைச் சிக்கனமாகக் கொண்டு செல்ல நாம் படும்பாடு யாருக்

குத் தெரிகிறது? செலவு செய்யும் உரிமை நமக்கென்று கம்பீரமாய்ச் சொல்லிவிடுகிருர்கள்! இதையெல்லாம் எடுத்தெழுத நம்மை இவர்கள் சரியாகவாவது படிக்கவைக்கிருர்களா? கிடையாது! அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு என்கிருர்கள்!

ஆண்கள் படித்திருப்பதுபோல் பெண்குலத்திலும் கல்வி பரவியிருந்தால் இன்று இந்தக்குறை இருக்குமா? இயற்கையும் இறைவனும் நம்மை வேறு படப் படைத்திருக்கிருனும்! ஆகவே, நாம் அடிமைகளாகவே வாழவேண்டுமாம்! "விலகி வீட்டிலோர் பொந்தில்" வசிக்கவேண்டுமாம்! ஆண்களின் புத்திசாலி, மூடன், பணக்காரன், பாமரன், ஏமாளி, எத்தன். எல்லாரும் ஒன்ரு? உரிமையில் மட்டும் இவர்களில் ஒருமை ஏன்?

செலவு செய்ய அதிகாரம் பெற்ற பெண், சொத்திலும் பங்கு பெருவதுதானே நியாயம் இதைமட்டும் ஏன் மறுக்கிருர்கள்? தனக்கெனத் தனிச்சொத்து ஏற்பட்டால் ஸ்திரீ புருஷனுடைய சொத்து என்று கருத முடியாமற்போய் விடுமோ என்ற எண்ணமா?

ரஷ்ய நாட்டைப்பாருங்கள்! பெண் ஆணுக்கு அடிமையல்ல என்று பகருங்கள்!

"செல்வம் இருவருக்கும் பங்கென்போம்—நல
க்ஷேமம் இருவருக்கும் பங்கென்போம்
கல்வி இருவருக்கும் பங்கென்போம்—தூய
கற்பும் இருவருக்கும் காப்பென்போம்"

—சுவாமி சுத்தானந்தர்.

ஆனால், இந்தப்புரட்சி ஆண்மகனால் அளிக்கப் படும் என்று எண்ணாதீர்கள். "அக்கா, அக்கா என்று நீ அழைத்தால், அக்கா வந்துக் கொடுக்கச் சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே?" என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கேட்பதன் உண்மையை உணருங்கள். நம் கைதான் நமக் குதவி. வாழ்க புரட்சி! வெல்க மாதர்!

**காலத்தின் கதறல்:—**

ஆண்மகனே! வீணாய் அலறாதே! பெருக் கெடுத்தோடும் உரிமை உணர்ச்சி வெள்ளத்தைச் சிற்றணையிட்டுத்தடுக்க முயன்று உன்கையைச் சேறாக்கிக்கொள்ளாதே! "இத்தனை நாள் அவள் அடங்கிக்கிடந்தது போதும்! இனி அவளும் நாமும் ஒத்துவாழ்வோம்" என்று உறுதிகொள்!

பெண்மகளே! பதறாதே! இன்று விளையும் இந்நலன்களெல்லாம் காலத்தின் கோலம்தான் இங்கிலாந்து சுயராஜ்ஜியம் தருவதாய்ச்சொன்னா லும் இந்தியாவுக்கு நம்பமுடியாததுபோல் ஆண் மகனின் நியாய உணர்ச்சியை நீ நம்ப மறுக்கிறாய்!

இன்றைய நிலைமையைச் சிந்தித்துப்பார். சுத் தானந்தர், திரு. வி. க., பாரதிதாசன் முதலிய பெரியோர்கள் பெண்ணுரிமைக்காகப் புகலும் பொன்மொழிகள் வீணாகிவிடுமா? வம்புக்காவது வெறுப்பை வளர்க்காதே. ஆணும் பெண்ணும் கூடிவாழ்வதே வாழ்க்கை.

"பெண்ணின்றி ஆணில்லை; ஆணின்றிப்
[பெண்ணில்லை
எண்ணிருவர் சேர்ந்தே இகம்"

—சுவாமி சுத்தானந்தம்.

---

R. தனலெட்சுமி.

P. G. ராஜகோபாலன், M. A.

உரிமைப் போராட்டத்தில் ஆண், பெண் என்ற பேச்சு எழுவதில்லை. மக்கள் என்றால் அது பொதுவாக இருபாலாரையுந்தான் குறிக்கும். ஆணுக்கொரு சட்டம், பெண்ணுக்கொரு சட்டம் என்று ஆண்டவன் உண்டாக்கவில்லை. மாறுபட்ட சட்டம் உண்டு என்று கூறினால் அது ஆண்கள் உண்டாக்கியது அதுவும் அறிவுடைய ஆண் மக்கள் உண்டாக்கிய சட்டமன்று. ஆண்கள் உயர்ந்தோர் என்ற இறுமாப்பில் அழுந்திக்கிடக்கும் அறிவீனர்கள் சட்டம். உலக மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத சட்டம்.

ஆண், பெண் இருபாலாரும் கலந்த கூட்டத்தை மக்கள் என்று குறிக்கிறோம். பெண்ணைத் தனியாகக் குறிப்பிட்டால் பெண் என்றுதான் குறிப்பிடவேண்டும்; ஆணைத் தனியாகக் குறிப்பிட்டால் ஆண் என்றே குறிப்பிடவேண்டும். ஆணை மட்டும் குறிப்பிட்டு மக்கள் என்று கூறமுடியாது. இது ஒருபுறம் இருக்கட்டும்.

ஆத்மா அல்லது உயிர் என்று சொல்லப்படும் உண்மையான பொருளில் ஆண் இது, பெண் இது அலி இது என்ற பாகுபாடு உண்டா? ஆணுக்கு, ஒருவகை உயிரும், பெண்ணுக்கு இன்னொருவகை உயிரும், அலிக்கு மற்றோர்வகை உயிரும் இருப்பதாக யாராவது கூற முன்வருவார்களா? ஆகவே

ஆண், பெண் என்ற இரு பாலாரிடத்தும் உள் நின்று இயங்குவது ஒரேவகை உயிர் என்பது தெளிவு அகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடில்லை. புறத்திலும் சில உறுப்பு வேறு பாடன்றி உண்மையான பொருளில் வேறு பாடில்லை. உயிரில்லை என்றால் உடல்-உடலா அது? மரக்கட்டைதான். ஆணாய் இருந்தாலென்ன, பெண்ணாயிருந்தாலென்ன? உயிருக்கு இன வேறு பாடு இல்லை; சமய வேறுபாடுமில்லை; நிறவேறு பாடுமில்லை. ஆகையினால் உரிமை என்பது மூக்கா லும் உண்மையாகும்.

ஆண், பெண் என்ற வேறுபாடில்லை, எல்லாம் ஒன்றே என்று கிருஸ்தவ வேதமாகிய பைபிள் கூறும். உயிர் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியு மல்ல என்கின்றன உபநிஷதங்கள். உயிர் எந்த உடலை அடைகிறதோ அந்த உடலோடு தற் காலிகத் தொடர்பு கொண்டு இயங்குகிறது என்பது வேதாந்தம் தரும் உண்மை.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என் பது மூத்தோர் வாக்கு.

> அகர முதல் எழுத்தெல்லாம்
> அன்னையின் முதற்றே உலகு

என்று கொள்வதில் கூடத்தவறில்லை

'அ' என்ற எழுத்தின் ஒலி உலகிலுள்ள, இது வரை கண்டு பிடிக்கப்பட்ட, பாஷைகள் ஒலிப்பது போல, இவ்வுலகம் அன்னையை முதலாகக்கொண் டது எனலாம். இயற்கை அன்னை உலகை நடத் துகிறாள். பராசக்தி உலகை ஆட்சி செய்கிறாள்;

இல்லத்தில் அன்னை இல்லத்தை நடத்துகிறாள். பிறக்கின்ற சிசு முதலில் அறிவது தன் அன்னையைத்தான். அன்னை சொல்லியே அப்பனை அறிகிறது. அன்னையின் அன்பைப் போல் குழந்தையைப் பரவசப்படுத்துவது உலகிலேயே வேறொன்றில்லை

இது மனிதர்களிடையே மட்டும்தான் என்றில்லை. மிருகங்களிடையில்கூடத் தாய்க்கும் சேய்க்கும் இடையேயுள்ள அன்பு மகத்தானது. மாட்டைத்தான் பாருங்கள்! பசுவுக்குத் தன் கன்றினிடம் எத்தனை பிரேமை. ஆகையால்தான்,

'கன்றின் குரலைக்கேட்டு கனிந்துவரும் பசு'

'கன்றிடம் கனிவு கொண்ட பசு'

'கன்று பிரிந்த காராவின் துயர்'

என்றெல்லாம் பக்திமான்கள் பாடுகின்றனர். கடவுளைத் தாயாகக்கொண்ட பக்திமான்களுக்குத் தான் குறைவுண்டா? குலசேகர ஆழ்வார் இறைவனைத் தாயாகப் பாவித்து உளங்கசிந்து பாடிய பாடல்கள்தான் எத்தனை?

ஏசுநாதர் தன்னைத் தாயாகவும், உலகிலுள்ள குழந்தைகள் யாவரையும் தன் சொந்தக் குழந்தைகளாகவும் பாவித்தார். அன்னையின் அன்பைக் கருதி அம்மை அப்பனுக்கு வணக்கஞ் செலுத்த வேண்டுமென்று பைபிள் கூறுகிறது,

முகம்மது நபியும் தாய்மையைப் பெரிதும் போற்றிப் புகழ்கிறார். 'சுவர்க்கம் தாயின் பாதத்தடியில் தான் இருக்கிறது' என்பது நபியின் வார்த்தை, 'ஒன்பது மாதம் தன்னைச் சுமந்து பெற்ற பின்னர் ஈ எறும்பு மொய்க்காது காத்து,

பாலூட்டிப் பராமரிக்கிறாள் அன்னை' என்று தாயின் புகழைப் பேசுகிறது குர்ஆன்.

பட்டினத்து அடிகள் தாயன்பைப் பாராட்டிப் பாடிய பாடல்களில் அவர் இதய ஒலியைக் கேட்கலாம். 'முந்தித் தவங்கிடந்து, முன்னூறு நாள் சுமந்தே.... தொந்திசரியச் சுமந்து பெற்ற தாயார்' என்று தாய் தன்னைக்காப்பாற்றபட்ட துயரங்களை எண்ணித்தாயின் பெருமையைப் போற்றுகிறார்.

அன்னை இன்றி அவனி இல்லை. இங்கே கண் கண்ட கடவுள் தாய் அப்படிப்பட்ட அன்னை பெண் வடிவமானவள். அப்படி இருக்க அவள் ஆணைவிட எந்த வகையில் தாழ்ந்தவளாக இருக்க முடியும்?

வாழ்க்கைத்தோணி உலகம் என்ற கடலில் ஒழுங்காகச் செல்லவேண்டுமானால் ஆணும், பெண்ணும் அதில் தோழமை பூண்ட படகோட்டிகளாக இருக்கவேண்டுவது அவசியம். இதில் ஒருவர் வீழ்ந்தாலும் படகு நேராகச் செல்லமுடியாது. உயர்ந்தவர் யார், தாழ்ந்தவர் யார் என்ற கேள்விக்கே இடமில்லை. வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரத்தை வள்ளுவனார் எழுதிய தன் உண்மைக் கருத்தே இதுதான். பெண்கள் பெருமையை மாசுபடுத்தும் எண்ணத்தோடு சிலர் இவ்வதிகாரத்தின் பொருளைத் திரித்துக்கூறியுள்ளனர் சிலர்.

இவ்வதிகாரத்தில் குடும்ப ஆட்சியில் பெண் பொருள் காப்பாளன் நிலையிலுள்ளவள் என்றும், ஆண் செயலாளன் நிலையிலுள்ளவன் என்றும் (ஒரு குறளில்) வள்ளுவர் விளக்குகிறார். ஆண் சம்பாதித்து வருகிறான். அதனைப் பத்திரப்

படுத்துவது பெண்ணின் கடமை. இதை அவள் செய்கிறாள். இதனால் உயர்வு ஆணுக்குண்டாகிறதா, பெண்ணுக்குண்டாகிறதா? இன்றைய அரசியலில் கூட உயிர் நாடியாக உள்ளவன் பொருள் காப்பாளன்தான். அவன் உதவியின்றி அரசியல் ஒழுங்காக இயங்காது அரசாங்கத்தின் மற்ற தொழில்களை நடத்துவோர் கூடத் தம் தொழிலுக்கு வேண்டும் செலவுக்குப் பொருள்காப் போனிடமே வரவேண்டும். இத்தகைய பெருமை யுடைய பொருள் காப்பாளன் ஒழுக்கத்தால் சிறந் தவனாக இருக்கவேண்டும் இவனைப்போல் குடும் பத்தின் பொருள் காப்பாளியான பெண்ணும் சிறந்த ஒழுக்க முள்ளவளாக இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

சக்தியாகிய பெண்ணே ஒழுக்க முடையவளாக இருக்கவேண்டுமானால் அந்தச்சக்தியால் இயக்கப் படும் ஆண் ஒழுக்கத்தில் எத்தனை தூரம் நேர்மை யாக இருக்கவேண்டும்? எனவே இருபாலரும் ஒழுக்கமுடையோராய்-கற்பு நெறிவழுவாதோராய் விளங்கவேண்டும். எப்படி ஒரு குலத்துக்கு ஒரு நீதி இருக்க முடியாதோ, அதுபோல ஒருபாலா ருக்கும் ஒரு நீதியும் இருக்கமுடியாது.

தெய்வந்தொழாஅள் கொழுநன் தொழு தெழு வாள் என்ற குறளில் பெண் ஆணிற்கு அடிமை என்பது வலியுறுத்தப்படுகிறது என்று சிலர் குதர்க்க வாதமபுரிவதுண்டு. தொழுகை என்பது ஒருகட்டுப்பாட்டை அடிப்படையாகக்கொண்டது, பகைகளைத்தான் தோன்றிகளாகப் போகவிடாது தடுப்பது என்பதை முதலில் உணரவேண்டும். மேலும் இங்கே குறிப்பிட்டதொழுகை தோழர்கள்

இருவர் பரஸ்பரம் செலுத்தும் வணக்கம் என்று கொள்வது தவறல்ல. இல்லறம் இனிது நடக்க இருவரும் மனமொத்து வாழவேண்டும், படுக்கையை விட்டெழும்போதே சண்டை ஆரம்பமானால் வாழ்க்கை சூன்யமாகாது என்னசெய்யும்? ஆனாலும் வணக்கத்தைப் பெண்கள் ஏன் ஆரம்பிக்கவேண்டும். ஆண் உடல் பலமுள்ளவன். பெண்மெல்லிய தன்மையுடையவள். தோழமையை அதிகரிக்கக்கூடிய ஆற்றல் பொருந்தியவள் பெண் தான். ஆகவே மிருகபலங்கொண்ட ஆணை அன்பினல் தன் வயமாக்கும் ஆற்றல் படைத்தவள் அவள்.

இயற்கையின்தோற்றம் இரண்டுபட்டது சூரியன்—சந்திரன், நிலம்—விசும்பு, பகல்—இரவு என்று இரண்டுபட்டே விளங்குகின்றது இயற்கை. ஆனல் இயக்கத்தில் இவை ஒன்ருகவே விளங்குகின்றன.

இயற்கையின் வெளித் தோற்றங்களாகிய ஆணும் பெண்ணும் இயற்கையின் பிரதி பிம்பங்கள் என்று கூறுதல் மிகையாகாது. உடலாகிய உலகிற்கு இரு கண்களுண்டு. இரண்டும் சேர்ந்தே எதையும் நோக்கும். ஒருகண் ஒருபுறமும் இன்னொருகண் இன்னொரு புறமும் பார்ப்பதில்லை. உயர்ந்தகண் ஒன்று, தாழ்ந்த கண் மற்ருென்று என்றும் இல்லை. இரண்டும ஒரேவிதமாக இயங்குகின்றன. ஒரேதிக்கோளோடு இயங்குகின்றன. இவ்விருகண்களாகிய ஆண், பெண் ஆகிய இருபாலாரும் இருந்தாலன்றி உலகம் ஓடாது. ஆணின்றி பெண் தனித்து வாழ இயலாது.

ஆணிடம் இல்லாத சிலகுணங்கள் பெண்ணிட முண்டு; பெண்ணிடம் இல்லாத சிலகுணங்கள் ஆணிடம் உண்டு அதேபோல ஆணுக்கில்லாத அவயவங்கள் சில பெண்ணுக்கும். பெண்ணுக்கில்லாத அவயவங்கள் சில ஆணுக்கும் உண்டு. வல்லமையிலும் அவ்விதமே. இந்நிலையில் உயர்வு தாழ்வு என்பதெல்லாம் எப்போது உண்டாகும்? எல்லா வகையிலும் ஒரேதன்மையான இவர்களிடத்தே உயர்வு தாழ்வு தோன்றும். ஆனால் ஆணும் பெண்ணும் அப்படி எல்லாவகையிலும் ஒரே தன்மையானவர்களல்லர். ஆகவே உயர்வு—தாழ்வு என்ற பிரச்சினைக்கே இடமில்லை.

ஆணைப்போல் பெண் வாழ்க்கை நடத்த முடியும்; பெண்ணைப்போல் ஆணும் வாழ்க்கை நடத்த முடியும். ஆனால் இயற்கைக்கு எதிரிடையாகப் போட்டிபோடுவது விரும்பத்தக்கதல்ல. இயற்கையின் நியதிப்படி சிலதொழில்களுக்கு ஆண்கள் மட்டுமே ஏற்றவர்களாக இருக்கிறார்கள். மற்றும் சில தொழில்களுக்குப் பெண்கள்தான் ஏற்றவர்களாக உள்ளனர். உடல் வருந்திப்பாடுபட ஆண்கள் லாயக்கானவர்கள். சகிப்புத்தன்மையோடு வேலைசெய்யும் திறமை பெண்களுக்கே அதிகம். அதனால்தான் இறைவன் குழந்தைபெறும் கஷ்டத்தை அவளிடம்விட்டுவிட்டான் போலும்! இது போல்பெண்களுக்காக விதிக்கப்பட்டுள்ள வேலைகள் யாவற்றுக்கும் சகிப்புத்தன்மை அவசியமாகும்.

கல்வி, வைத்தியம் ஆகிய துறைகளில் ஆண்களைவிடப்பெண்கள் சிறந்த தொண்டுசெய்யக் கூடியவர்கள். ஆசிரியன் பயத்தால் குழந்தைகள்



3648

பாடங்கற்கும்; ஆசிரியை அன்பினால் குழந்தைகளைப்பாடம் படிக்கும்படி செய்வாள். வைத்தியன் இனியவார்த்தை கூறாது நோயாளியின் வியாதியை அதிகரிக்கச்செய்வான்; பெண் வைத்தியர் வியாதியஸ்தனை அன்பான மொழிகளாலேயே குணமடையச்செய்து விடுவாள்.

முடிவாக ஆண்கள் செய்யும் பல தொழில்களிலும், போட்டியிட்டால் தங்களுடைய நுட்ப அறிவினாலும், பொறுமையினாலும் பெண்கள் வெற்றி பெற்றுவிடமுடியும், எனினும் அவர்களுக்குத் தகுந்த இடம் வீடுதான் இல்லறத்தைச்செவ்வனே நடத்துவதுதான் அவர்கள் சமூகத்துக்குச் செய்யும் சிறந்த தொண்டு. இயற்கைக்கு ஒத்தமுறையில் வாழவேண்டுமானால் பெண்களுக்குத் தாழ்விலே பங்குண்டென்றால் வாழ்விலும் சம பங்குண்டு.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது சிறந்தமொழியாகும். உலகத்தோர் ஒரு விஷயத்தைப்பற்றி என்ன அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள் என்பதை அறிய நாம் தெருவில் செல்கிற காமன், சோமன் கருத்துக்களைக்கேட்பதில்லை. உலகிலுள்ள அறிஞர்கள் அதுகுறித்துக் கூறுவதென்ன என்பதைத்தான் கவனிக்கிறோம். அதுபோலவே இப்போது நாம் பேச எடுத்துக்கொண்ட பொருளையும் நோக்கலாமே? பெண்ணுக்குச் சமஉரிமை அவசியமா? என்ற கேள்வியை எழுப்பி என்னைவிட அறிவிலும் அனுபவத்திலும் மிகுந்த அக்காமார்கள் தம்வாதத்திறனால் பெண்களின் உண்மை இடம் எது என்பதை நிர்ணயிக்க முயன்றிருக்கிறார்கள்.

உலகில் உயர்ந்தோர் ஆண்களுள் சிறந்தோர் பெண்களைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்பதைத்தானே நாம் கவனிக்கவேண்டும். பழைய காலத்து வள்ளுவர் முதல் நம்காலத்து திரு. வி. க. வரை உள்ள தமிழறிஞர்கள் சொல்வதென்ன? 'பெண்கள் தாழ்ந்தவர்கள்; ஆண்களின் அடிமைகள், அவர்கள் தொண்டுசெய்து மிருகமாய் உழைத்து மாளவேண்டும்" என்று இவர்கள் கூறுகின்றனர்? இல்லையே, பெண்மையின் பெருமையை, தாய்மையின் அருமையை போற்றி கொண்டாடத்தானே செய்கின்றனர்!

நம்முள் சிலருக்கு 'சிறுமை உணர்ச்சி' உண்

டாகி விடுகிறது. அதாவது நாம் ஆண்களைவிடத் தாழ்ந்தவர்களோ; ஆண்கள் எல்லா வகையிலும் நம்மைவிட உயர்ந்தவர்கள் தானே? என்ற ஐயம் எழுந்து விடுகிறது. அதன் பயனாய் அவர்கள் பெண்களுக்குரிய பெருமையை மறந்து ஆண்களைப்போல் கம்பீரமாக நடக்கவும், ஆண்கள் அங்கவஸ்திரம் போட்டு அதன் நுனியை ஜாக்கெட்டினுள் சொருகிக்கொள்வதும் போன்ற காரியங்களைச் செய்யத்தொடங்கிவிடுகின்றனர். இதுமனோ தத்துவ விஷயம். இந்த மனப்பான்மை தவறானது.

உலகம் என்பது அறிஞர்களே என்று ஆரம்பத்தில் கூறினேன். ஆண்களுள் நமது சமீப காலத்தில் வாழ்ந்த கவிஞர்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள் பெண்களாகிய நம்மைக்குறித்து எத்தனை பெருமையாகப்பேசுகிறார்கள் தெரியுமா? ஏன், என் அக்கையார்கள்தான் அவர்கள் கூற்றுகளை மேற்கோள்களாகக் கையாண்டார்களே!

**இதோ மகாகவி தாகூர் சொல்வதைப்பாருங்கள்:**

ஏ பெண்ணே,
ஆண் தன் இதய எழிலால்
உன்னை சிறப்பிக்கிறான்.
கவிஞர்கள் உனக்காகப்
பொன்மயமான கற்பனை
நூல்களாய சல்லாவை ஆக்குகின்றன........
கடல் முத்துக்களை,
நிலக்குகை பொன்னை,

சரத்கால வனங்கள் மலர்களை
தருகின்றன,
உன்னை அலங்கரிக்க,
அலகு படுத்த,
அதிகச்சிறப்புள்ளவளாகச் செய்ய.

குடும்ப இன்பத்திலே வீட்டு எஜமானியாய் மனைவியாய், பொன் விளக்குப்போன்ற குழந்தைகளின் தாயாய் வீட்டை நிர்வகிக்கும் பெண்கள் தம் பெருமை எது என்பதை அறியலாம். கணவன் கோபக்காரனுகக்கூட இருக்கலாம்; ஏழையாக இருக்கலாம். எனினும் உண்மையான பெண்மையுடைய மனைவி அவன் மனப்புண்ணுக்கும் மருந்திட்டு சாந்தியுண்டாக்குகிருள். ஆகவேதான் "தாய்மை என்ற சுவர்க்கத்திலே உற்பத்திகள் என்ற பூக்கள் மலர்கின்றன" என்று சொன்ன மகாகவி இக்பால் பெண்ணைக்குறித்து இவ்விதங்கூறினர்.

பெண்மையின் ஸ்பர்ஸத்தால்
ஆண்மைத்தந்தி நாதமெழுப்புகிறது
அவள் அடிபணிதல்
அவனை அதிகப் பலவானுக்குகிறது.
ஆணின் மானங்காக்கும் ஆடை அவள்.
இறை அன்பு அவள் மடியிலே
வளர்க்கப் படுகிறது.

இவர்கள்மட்டுமென்ன, எல்லா ஆண்கவிஞர்களும் பெண்களைப் பாராட்டுகின்றனர்; போற்றுகின்றனர்; புகழ்கின்றனர்; நமது பெருமையைப்

பாடுகின்றனர்; நம்புகழை இறவாத இலக்கிய மாகச் சமைக்கின்றனர். இது நமக்குப்பெருமை தருவதில்லையா? இது நமது உயரிய இடம் எது என்பதை எடுத்துக்காட்டவில்லையா? இதோ பாருங்கள் நமது மகாகவி பாரதி, என்ன சொல்கிறார் என்று,

*அன்னமூட்டிய தெய்வ மணிக்கையின்*
*ஆணைகாட்டில் அனலை விழுங்குவோம்*

*கன்னத்தே முத்தங்கொண்டு களிப்பினும்*
*கையைத்தள்ளும் பொற்கைகளைப் பாடுவோம்.*

பாட்டைப்படித்துப் படித்து ஆனந்தக் கண்ணீர் சொரிவோம்

அந்த ஒருமுறையில்தான் நாம் ஆணாகிய இக் கவிஞனுக்கு, "மாதரின் பெருமை மகத்தானது; மாதர் தம்மை, மூடர்களே, இழிவு செய்யாதீர்கள்!" என்று குரல் எழுப்பிய பெரியாருக்கு நாம் நன்றி செலுத்த முடியும். நமது புத்தேரிக்கவிஞர்கூடப் பெண்களைப்பற்றி எத்தனை தூரம் மனமுருகிப் பாடுகிறார் பாருங்கள்!

*மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல*
*மாதவஞ்செய்திட வேண்டுமம்மா!*
*பங்கையக் கைநலம் பார்த்தலவோ—இந்தப்*
*பாரில் அறங்கள் வளருமம்மா!*

'அம்மா' என்று அருமையாக அழைத்து இக் கவிஞர் தரும் இன்மொழிகளின் கனிவைப் பாருங்கள். இத்தனை பெருமையையும் நம்முள்ளே அடக்கிக்கொண்டிருக்கும்போது கேவலம் ஆண்கள்

செய்கின்ற காரியங்களில் அவர்களோடு போட்டி போட வேண்டுமா? 'ஏ ஆணே, நீயும் நானும் சமமா, இல்லையா?' என்று கேட்டுப் பயமுறுத்த வேண்டுமா? அந்த அப்பாவி ஆண் 'இது கவிஞர்கள்போற்றி பாடிய பெண்ணு, அல்லது அன்று பரமனையும் பயமுறுத்திய சக்தி தேவியின் ஜீவ சக்திகளா?' என்று எண்ணி அஞ்சவேண்டுமா? ஆத்திரம் நம் சொத்தல்ல. அது இருந்தால் அதைச்சற்று அப்பால் தள்ளிவிட்டு அமைதியோடு சிந்தியுங்கள்.

எனக்கு முன் பேசிய அக்கையார்கள் இன்று பிரபலம் பெற்றுள்ள பெண்மணிகளை எடுத்துக் காட்டி அவர்கள் ஆண்களைவிடச் சிறந்தவர்களில்லையா, சந்தர்ப்பங்கிடைத்தால் பெண்கள் எதையுஞ்செய்யமுடியும்என்பதை இதுகாட்டவில்லையா என்றெல்லாம் கூறினார்கள். ஒத்துக்கொள்கிறேன். அவர்கள் பெண்களின் பெருமையை எடுத்துக்காட்டினார்கள். ஒத்துக்கொள்கிறேன். ஆனல் பொதுவாழ்க்கையை அப்பழுக்கற்றதாக வைத்துக்கொள்ளவேண்டுவது மிக மிக முக்கியம். என் அக்கையர்கள் கூறிய ஒரு பிரபலபெண்மணியைப்பற்றி நான் அறிவேன். மனத்தால் உன்னியவரை மணப்பதற்கு மதம் குறுக்கே நின்றது இன்றுள்ள மாபெரும் அரசியல் தலைவர்கூட அப்பெண்மணிக்குப் புத்திபோதித்தார். கடைசியில் உள்ளிய வரை மணக்கவொண்ணாது அவருடைய அந்தரங்க வாழ்க்கை திருப்தியற்றதாயிற்று. வீரத்திற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் எடுத்துக் காட்டிய பெண்மணியின் அந்தரங்கவாழ்வு எப்படிப்பட்டதென்பதை நீங்கள் அறிந்திருக்கலாம் இவர்கள் மட்டுமென்ன, டெல்லியிலிருந்து பெரிய

ராஜ்யத்தைக் கட்டியாண்ட சுல்தானு ரஸியாவின் அந்தரங்க வாழ்க்கை மாசு பெற்றதால் அவர் கொலையுண்டார் என்பது எத்தனை பேருக்குத் தெரியாது.

என்னுடைய சமயம் நான் எந்த வழியில் முன்னேறுவதானாலும் எனக்கு ஊக்கம் தருவது. என்னுடைய வேதம் 'ஆண்கள் உழைப்பின் பயன் அவர்களுக்கு' பெண்கள் உழைப்பின் பயன் பெண்களுக்கு என்று' ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை தருவது. நான் நம்பிக்கை கொண்டுள்ள இறைவன் தூதர் 'சுவர்க்கம் மாதாவின் பாதத்தடியிலே' என்று கூறுகிறார். என்னுடைய வமிசத்தினரில் (பெண்களில்) சாந்த் பீபிகளும் தாஹிராக்களும், ஷா ஹந்தாக்களும், அல்புதாலியாக்களும் ஆகிய அரசிகள், கவிஞர்கள், நிபுணர்கள், பேராசிரியைகள் யாவரும் வாழ்ந்திருக்கின்றனர். ஆனல் இவர்கள் வழி பெண்களின் லக்ஷிய வழி என்று நான் நம்பவில்லை; நம்பவும் முடியாது.

இறைவன் முன் நானும் என் கணவரும் ஒன்று; என் ஆத்மாவையும் அவர் ஆத்மாவையும் எல்லாம் வல்ல பரம்பொருள் ஒரே நிறையுள்ளதாகவே ஆக்கியுள்ளான். எனது செயல்களின் பயன் என் ஆத்மாவுக்குக் கிடைக்கிறது; அவர் செயல்களின் பயனை அவர் ஆத்மா அடைகிறது. இதற்காக நான் கடமைகளை மறக்கக்கூடாது; மறக்கவும் முடியாது. அவர் தன் கடமைகளை மறுக்கக்கூடாது. பரஸ்பரம் இருவரும் மறந்தால் — உலகிலுள்ள ஆண் பெண்களெல்லாம் தத்தம் கடமைகளை மறந்தால் — உலகம் எந்த நிலையை அடையும். என்

கணவருக்கு நான் மனைவிமட்டுமல்ல; அவர் என் மகன்; நான் அவர் புத்திரிகூட. இதுதான் என் பெருமை. இதுதான் என் வர்க்கத்தின் பெருமை.

ஆமாம், தொட்டிலாட்டிய கரம் உலகை ஆட்ட வழி சொல்லித்தருகிறது. நெப்போலியனை வளர்த்தவள் நான்; முஸ்தபா கமாலை மனிதனுக்கியவள் நான்; தாகூரையும் இக்பாலையும் பாரதியையும் ஈன்றவள் நான்; ராமலிங்கருக்கு இன்பப் பால் ஊட்டியவள் நான்; பெண்ணுருவிலிருந்த பேயை மணந்ததவற்றால் என்னை, என்வர்க்கத்தை தூஷித்த குருட்டு மில்டன் என்மகன்; காந்திக்கும் ஜின்னாவுக்கும் அன்னை நான். "இறைவா, இந்த உரிமை என்னுடையது. இதுவே உலகின் சுவர்க்கம். இதுயாரும் பறியாது அருள்புரி!—ஆமாம் இதையாரும் பறிக்கமுடியாது. பறித்தால் உலகம் எப்படி வாழமுடியும்?

ஆகவே, இறைவா என் இனத்தினரை வழித் தவறாது காப்பாற்று; அவர்களுக்குள்ள உரிமைகளையும் பாறுப்புகளையும் அவர்கள் உணரும்படி செய். என்வர்க்கத்தின் பெருமையை இன்னும் அதிகப்பருமையுள்ளதாக்க, உலகை உயர்த்த அவர்க்கு வேண்டும் ஆற்றலை அருள்!" என்று வேண்டுவதோடு இதை முடித்துக்கொள்கிறேன்.

R L. PRESS G. O. C. TY. 65. 27—8—47. GOP. 1000

# தமிழரிடையே அன்புப்போர்

ஆசிரியர்:- பழம் நீ—கே. வீ. வி.

தமிழ் இலக்கிய உலகில் இது ஒரு புதுமை. திரு. வி. க., ரா. பி. சேதுப்பிள்ளை. வ. ரா, கல்கி, எஸ். வி. வி. போன்ற எழுத்தாளர்கள் ஈ. வெ. ரா., அண்ணாத்துரை. சர். சி. பி., ராஜாஜி. கர்னல் லட்சுமி போன்ற தலைவர்கள், தே. வி, பாரதி தாசன் போன்ற கவிகள், S. S. வாசன், M. S. சுப்பு லட்சுமி, நவாப். ராஜமாணிக்கம் போன்ற கலைஞர் கள் ஆக பலருக்கு 47 கடிதங்களும், தமிழ் எழுத் தாளர்களுக்கு யோசனைகளும், வாசகர்களுக்கு உற்சாகமும் அளிக்கும் சிறந்த இலக்கிய விமரி சனம். 'ஒப்பிலாத புத்தகம் – உலகத்துக்கே ஒரு புதுமை' என்று பலராலும் பாராட்டப்படுவது.

**அனைவரும் அவசியம் படிக்கவேண்டிய புத்தகம்.**

**விலை ரூ. 1—0—0**

---

## வீரத் தமிழருக்கு ஆவேசக்கடிதங்கள்,

ஆசிரியர் கவியோகி சுத்தானந்த பாரதியார்

ஒற்றுமைக்கு வழி, தனித்தமிழ் ஆராய்ச்சி, கம்பர், பாரதியார், மகாத்மா காந்தி, நோய், பைத்தியத்துக்கு சிகிச்சை, புதுமைப்பெண், திருமணம். நடனக்கலை, யாப்பு, மௌனம் இவைபோன்ற பல சிறப் பட்ட பொருள்களைக் குறித்து நெருங்கிய அன்பர்களுக்கு அடிகள் எழுதிய அரிய கடிதங்கள் இன்று அனைவரும் படித்து இன்புற அம் பலத்துக்கு வந்திருக்கின்றன. வாழ்க்கையில் எந்தத் துறையிலும் வழி காட்டக்கூடிய கடிதங்கள் இதில் அடங்கியுள்ளன.

**—: அவசியம் படியுங்கள் :—**

எல்லா புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

**விலை ரூ 1—6—0**

"தமிழின்பம்" ரா. பி. சேதுப் பிள்ளை எழுதியது (அச்சில்)

"பூந்துறை" ர. பா. கனி எழுதியது (அச்சில்)

தமிழன் பேசி,..! பழம் நீ எழுதியது (இரண்டாம் பதிப்பு அச்சில்)

**நியூ இந்தியா புக் ஹவுஸ்,**

இராமச்சந்திரபுரம் P. O. திருச்சிஜில்லா.

# அழகிய புகைப்பட நிலையம்

புதிய கருவிகள் பொருத்தமான கட்டணம்

உங்கள் உருவங்களை பல வண்ணங்
களில் கையால் எழுதுவதிலும்
நிலயத்திலும் வெளியிலும் புகைப்
படம் எடுப்பதிலும்

**மிகத் திறமை வாய்ந்தவர்கள்**

வீரத்தமிழருக்கு! சுத்தானந்தர் புத்தகத்தில் வெளிவந்துள்ள உருவப்படங்களில் பல எம்மால் எடுக்கப்பெற்றவை. ஒருமுறை வந்து பாருங்கள். ஒய். எம். சி. எ. பட்டி மன்ற அங்கத்தினர்கள் பலர் எங்கள் ஸ்டுடியோவில் புகைப்படம் எடுத்துள்ளார்கள்.

வருக-நல்வரவு

---

## செல்பரோஸ்டுடியோ,

ஓவியத்தொழிற்சாலை

2-184, பிராட்வே, சென்னை.